பட்டினத்தடிகளின் அற்புத வரலாறு

எழுதியவர்
"வானொலி" ஜெயம்கொண்டான்



வெளியீடு
கலாக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - காரைக்குடி 630307
சிவகங்கை மாவட்டம்
போன் : 04565 236846, 238783

கோவிலூர் மடாலயம்
52 குப்பையாசெட்டி தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033
போன் : 044 - 24743081

பட்டினத்தடிகளின் அற்புத வரலாறு

க. ஜெயம்கொண்டான் எம்.ஏ. (தமிழ்)
[முன்னாள் முதுநிலை அறிவிப்பாளர்
அகில இந்திய வானொலி, சென்னை]

கலாக்ஷேத்திரா பப்ளிகேஷன்ஸ்

நிர்வாக அலுவலகம்:	விற்பனை நிலையம்:
கோவிலூர் மடாலயம்,	கோவிலூர் மடாலயம்,
கோவிலூர் 630 307.	52, குப்பையா தெரு,
(காரைக்குடி அருகில்)	மேற்கு மாம்பலம்,
போன்: 04565 – 236846	சென்னை – 33.
E-mail: koviloormutt@gmail.com	போன்: 044 – 24743081

முதல் பதிப்பு : ஜனவரி 2016
பக்கங்கள் : 48
விலை : ₹30/-

சென்னையில் கிடைக்குமிடம்
கோவிலூர் மடாலயம்
52, குப்பையா தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33.
போன்: 044 – 24743081

நிர்வாக அலுவலகம்
கோவிலூர் மடாலயம்
கோவிலூர் – 630 307.
(காரைக்குடி அருகில்)
தொலைபேசி: 04565 – 236846
E-mail: koviloormutt@gmail.com

கலாக்ஷேத்ரா அச்சகம்
கோவிலூர் – 630 307.

ஆசியுரை

கோவிலூர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்

எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமானைப் பெரிதும் நேசித்து அவனுக்கு நூற்றுக்கணக்கான கோவில்களைக் கட்டித் திருப்பணிகள் செய்து அனுதினமும் அவனுடைய திருவடிகளையே சிந்தித்து வாழ்கின்ற இனம் நகரத்தார் சமுதாயம்.

அதிலே பல மகா உன்னதமான குணங்களையும், பெருமைகளையும் கொண்ட மகான்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நகரத்தார் வரலாறு செம்மையாக அறியப்படவில்லையென்றாலும் இலக்கிய வாயிலாகவும், செப்பேடுகள், கல்வெட்டு வாயிலாகவும் ஓரளவிற்கு அறியப் பெற்றுள்ளது. கோவலன் கண்ணகி, காரைக்கால் அம்மையார் இவர்களுக்கு அடுத்தபடியாகத் தோன்றிய மாமனிதர், சித்தர் பட்டினத்தடிகள் ஆவார்கள்.

இறைவன் இருவரை அம்மை என்றும் அப்பன் என்றும் அழைத்ததாக இலக்கியங்கள் சொல்கின்றன. இறைவன் காரைக்கால் அம்மையாரை பார்வதி தேவியிடம் இவள் "நம்மைப் பேணும் அம்மை" என்று அறிமுகப்படுத்தியதாகப் பெரியபுராணம் சொல்கிறது. திருவிடைமருதூர் இறைவன் பட்டினத்தாருடைய சுவீகாரப் புத்திரர் மருதவாணராக வளர்ந்ததாகப் பட்டினத்தடிகளின் வரலாறு.

இறைவனையே திருமகனாகக் கொள்கின்ற பேறுபெற்றவர் நம் பட்டினத்தார். உண்மையை உணர்ந்ததும் செல்வம், உறவு, பற்று, பாசம் அனைத்தையும் உதறி, கோவண ஆண்டியாகத் துறவு ஏற்றவர் பட்டினத்தார். அதுமட்டுமல்ல, நிலையாமைத் தத்துவத்தைத் தெளிவாகவும், வலிதாகவும் எளிதாகவும் உணர்த்தியவர்களில் பட்டினத்தாரை மிஞ்சியவர்கள் யாருமில்லை.

பட்டினத்தாருடைய பாடல்களைப் படித்து உணர்ந்தவர்கள் தெளிவடையாமல் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஓங்கிய ஞானத் தெளிவும் பக்தித் தெளிவும், கவிதை அழகும் கொண்டவை பட்டினத்தடிகளின் பாடல்கள். பட்டினத்தடிகளின் பெருமைகளையும், அற்புதங்களையும் நகரத்தார் தெளிவாக உணர்ந்து பயன்பெறுவதற்காகக் காவிரிப்பூம்பட்டினத்திலே நூறு

ஆண்டுகளுக்கு மேலாக பட்டினத்தடிகளின் வரலாறை பன்னிரண்டு நாட்கள் திருவிழாவாக நகரத்தார் சமூகம் கொண்டாடி வருகிறது. இந்தத் திருவிழாவில் அனைத்து நகரத்தார் ஊர்களைச் சார்ந்த ஆயிரக்கணக்கான நகரத்தார்கள் கலந்து கொள்கிறார்கள். இந்தத் திருவிழாவை மிகச் சிறப்பாகக் கண்டனூர் அருணாசலம் செட்டியார் குடும்பத்தார்கள் பொறுப்பேற்று அனைத்து நகரத்தார்களினுடைய பொருளுதவியாலும், ஒத்துழைப்பாலும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

இந்தத் திருவிழாவிலே ஏறக்குறைய 20 ஆண்டுகளாக நம்முடைய திருமடமும் பங்கு கொண்டு வருகிறது. நகரத்தார் இனத்தின் வரலாறு, பெருமை, திருவிழாக்கள், குடும்ப விசேஷங்கள், பழக்கவழக்கங்கள், அனைத்தைப் பற்றியும் ஓர் ஆவணப்படம் எடுக்க விரும்பி 2013ஆம் ஆண்டு காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தார் விழா ஒளிப்பதிவு செய்யத் தொடங்கினோம். 2015இல் காவிரிப்பூம்பட்டினத்னதில் 'செட்டிநாட்டு பாரம்பரியம்' ஆவணப் படத்தின் ஒரு பகுதியைப் பட்டினத்தாரின் வரலாறும், அற்புதங்களும் என்ற குறும்படத்தை வெளியிட்டு நல்லமுறையிலே பரவி வருகிறது.

இந்தப் பட்டினத்தார் ஆவணப் படத்திற்கு வானொலியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மேலைச்சிவபுரி க. ஜெயங்கொண்டான் அவர்கள் தெளிவாக வர்ணனை செய்துள்ளார்கள். பட்டினத்தாரின் வரலாற்றையும், பாடல்களையும் சிறுநூலாக வெளியிட்டால் அனைவருக்கும் பயன்படும் என்று கருதியதால் இந்த நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலைப் படித்து நகரத்தார்கள் தம்முடைய சமுதாயத்தைப் பற்றியும், பாரம்பரியத்தைப் பற்றியும் அறிந்து தெளிந்து நன்மையடைவார்கள் என்று நம்புகிறோம். இந்தப் பணியில் ஈடுபட்ட க. ஜெயங்கொண்டான், படத் தொகுப்பாளர் பி. லெனின், அழ. ராமசாமி, முல்லை மு. பழநி, பலவான்குடி முருகேசன், பாலமுருகன், திருமதி ஆனந்தி அவர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

இந்நூலைப் படிப்பதனால் அனைவருக்கும் அறிவும், தெளிவும், அமைதியும் கிடைக்கும் என்று ஆண்டவன் திருவடி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீசற்குருநாதன் துணை

ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்

ஜனவரி, 2016 கோவிலூர் ஆதீனம்.

30-4

உங்களுடன் ஒரு சில செய்திகள்...

தாயுமானவர், பாம்பன் சுவாமிகள், இராமலிங்க அடிகளார், பட்டினத்தார், பத்ரகிரியார், இந்த பெருமக்களின் - தெய்வீகக் கவிஞனின் வரிசையில், என்னை மிகவும் பாதித்தவர் பட்டினத்தார். எத்தனை பட்டினத்தார்கள் இருந்தார்கள் என்ற ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. பட்டினத்தாரின் வாழ்வும், பாடல்களும் என்னை மிகவும் ஆட்கொண்டன. நிலையாமையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்த அவர், தாய்ப்பாசத்திலும் தலைநிமிர்ந்து நிற்கிறார்.

ஒருசமயம், நற்சாந்துபட்டியில் நடைபெற்ற 63 நாயன்மார் - தொடர் சொற்பொழிவின் நிறைவுநாளில், கோவிலூர் மடாதிபதி, சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள் தலைமையில், பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதுதான் சுவாமிகளுடனான என்னுடைய முதல் சந்திப்பு. நான் நாயன்மார்களுடன் இணைத்து பட்டினத்தாரைப் பற்றிப் பேசியது சுவாமிகளுக்குப் பிடித்திருந்தது.

ஓரிரு மாதங்களுக்குப் பிறகு, மடாலயத்திலிருந்து ஒரு அழைப்பு. பழனி பாதயாத்திரை பற்றிய ஆவணப் படத்திற்கு என்னை, வர்ணனை செய்யும்படி சுவாமிகள் பணித்தார்கள். மனமகிழ்வுடன் நிறைவேற்றினேன்.

மீண்டும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு சுவாமிகளிடமிருந்து ஓர் அன்புக் கட்டளை. "காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும், பட்டினத்தாரின் அற்புதத் திருவிழாவைப் படமாக்கியுள்ளோம். அதற்கு, பட்டினத்தாரின் அற்புதங்களையும், வரலாற்றையும், திருவிழாவையும் இணைத்து, ஒரு கதையாக - வர்ணனையாக எழுதி, அதை உங்கள் குரலில் ஒலிப்பதிவு செய்து கொடுக்க வேண்டும். அதை ஒலிப்பேழையாக வெளியிட உள்ளோம்" என்றார்கள்.

கரும்பு தின்னக் கசக்குமா? என்னை மிகவும் பாதித்த பட்டினத்தாரைப் பற்றி எழுத, நான் மிகவும் மதிக்கும் சுவாமிகளிடமிருந்து அழைப்பு. அன்போடு ஏற்றுக்கொண்டு வெளிவந்து, மக்களிடம் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது.

நான் தலைவராக உள்ள திருவான்மியூர் நகரத்தார் மன்றத்தின் 30ஆவது ஆண்டு விழாவில் பட்டினத்தார் பற்றிய இந்தப் பதிவை நூலாக வெளியிட சுவாமிகளிடம் அனுமதி கேட்டேன். அவர்கள் மிகவும் அன்போடு, மடாலயத்தின் சார்பிலேயே புத்தகமாக வெளியிட்டு எங்கள் மன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்க இசைவு தந்தார்கள். வரலாற்றுடன், பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கோவிலூர் மடாலயத்துடனும், சுவாமிகளுடனும் என்னுடைய தொடர்பு தொடர்கிறது. இது என்றென்றும் தொடர விரும்புகிறேன். மடாலயத்தின் ஆன்மிகப் பணிகளில், மனநிறைவோடு, என்றும் ஈடுபட விரும்புகிறேன். மடாலயத்திற்கும், சுவாமிகளுக்கும் மீண்டும் ஒருமுறை என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

க. ஜெயம்கொண்டான்

30-4

பட்டினத்தடிகளின் அற்புத வரலாறு

காவிரிப்பூம்பட்டினம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இது ஒரு துறைமுகப்பட்டினம். கடல் வாணிபம் செழித்து ஓங்கிய ஓர் ஊர். தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பாருக்கே பறைசாற்றிய பட்டினம். நாளங்காடியும், அல்லங்காடியும் எழுநிலை மாடங்களும், யவனர், கிரேக்கர் எனப் பன்னாட்டு வணிகர்களுக்கும் வாணிப வாயிலாய் அமைந்த நகரம். அந்நகரம் தமிழர்களுக்கு மட்டுமா சிறப்பைத் தந்தது. தமிழர்களின் ஒருபகுதியினரான நகரத்தார்களுக்கும் சிறப்பைத் தந்தது.

பன்னெடுங்காலம் முன் "நகரேஷு காஞ்சி" என்று சொல்லப்படும் காஞ்சிபுரத்தில் வணிகத்தில் ஈடுபட்ட இந்தக் குழுவினர் காலத்தின் கோலத்தால் காவிரிப்பூம்பட்டினம் வந்து குடியேற வேண்டியதாயிற்று. "காஞ்சி என்னும் நகரத்தில்" இருந்து இவர்கள் வந்ததால் நகரத்தார் என்று அழைக்கப்பட்டனர். நகரத்தார் மன்னர் பின்னோர் மன்னருக்கு முடிசூட்டும் உரிமை பெற்றவர்கள். மன்னருக்கே பணம், கொடுத்து வாங்கி "கொடுக்கல் வாங்கலில்" ஈடுபட்ட பெருமைக்கு உரியவர்கள்.

நகரத்தார்களில் புகழ் பெற்ற கோவலன் - கண்ணகி வலம் வந்த ஊர் இது. எல்லாம் வல்ல இறைவனாலேயே "தந்தை" என்றும் "அம்மையே" என்றும் அழைக்கப்பட்ட சிறப்பைப் பெற்றவர்கள் நகரத்தார்கள். "தந்தை" என்று அழைக்கப்பட்டவர் திருவெண்காடராகிய பட்டினத்தார். "அம்மையே" என்று அழைக்கப்பட்டவர்

காரைக்காலம்மையார். இத்தகைய சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவர்கள் வாழ்ந்ததும், இக்காவிரிப்பூம்பட்டினம் பகுதியில்தான்.

"நிலையாமை"யைப் பற்றிப் பாடியவர்களில் தலைசிறந்தவர் "பட்டினத்தார்" என்றே துணிந்து கூறலாம். சாதாரணமாக, துறவு மேற்கொள்பவர்கள் "அவனருளாலே அவன்தாள்" பணிந்து பற்பல தத்துவங்களையும் இறைக்கொள்கைகளையும் பல ஆண்டுகள் படித்தறிந்து, மனதை அடக்கி, ஒரு குருவின் கீழ், அல்லது ஒரு மடத்தில், சேவை செய்து சிறிது சிறிதாக நிலையாமையைப் பற்றியும் மாயைநிறைந்த, பொய்யான இவ்வுலக வாழ்க்கை பற்றியும் உணர்வார்கள். ஆனால் ஒரு நொடியிலே "மன்னர் போல்" வாழ்ந்த அதே ஊரில் அனைத்தையும் துறந்து, கோவணாண்டியாக, பிச்சை எடுத்து உண்டு வாழும் அந்தமனப் பக்குவம், பட்டினத்தாருக்கு மட்டுமே வந்தது. அதனால்தான் நிலையாமையைப் பற்றிய அவருடைய பாடல்கள் அரிதினும் அரிதாகவும் இருக்கின்றன. கேட்பவர் கன்னத்தில் அறைந்து சொல்வது போலவும் இருக்கின்றன.

பட்டினத்தாருடைய வாழ்க்கை நமக்கெல்லாம் ஒருபாடம். அலைபாயும் மனத்திற்கோர் கடிவாளம். அவ்வப்போது நம்மை அச்சுறுத்தி நேர்வழியில் பயணிக்க வைக்கும் வழிகாட்டி. காஞ்சியிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வந்த நகரத்தார் பெருமக்கள், கடல்கோள் காரணமாகவும் மன்னரின் தகாத கெடுபிடி காரணமாகவும் வானம் பார்த்த பூமியான தற்போதைய செட்டிநாட்டுப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். நகரக்கோயில்கள் பல கண்டனர். ஐநூற்றுவர் ஏழுபிரிவாகி, பின் ஒன்பது பிரிவாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆனாலும் பட்டினத்தார் பிறந்து தவழ்ந்து நடமாடிய அந்தப் பகுதியிலேயே, அனைத்து ஊர் நகரத்தார்களும் இணைந்து பட்டினத்தார் வரலாற்றைக் காட்சிப்படுத்தி, கண்டு, கேட்டு, கூடி உண்டு, மீண்டும் மீண்டும், ஆண்டுதோறும் அந்தப் பொற்காலத்துக்குப் போய் வருகிறார்கள்.

இந்த அற்புதத்திருவிழா எப்போது, எப்படி தொடங்கியது தெரியுமா? ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு

முன்பு சுவாமி சின்மயானந்தா பட்டினத்தார் வரலாற்றைக் கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தார். எங்கே? காவிரிப்பூம்பட்டினத்திலே. தற்செயலாக அல்லது இறைவன் சித்தத்தால் அங்கு வந்து இந்தக் கதையைக் கேட்ட கண்டனூர் "மகாதேவா"காசிச் செட்டியார் பட்டினத்தார் வரலாற்றால் ஈர்க்கப்பட்டார். சின்மயானந்தா சுவாமியைச் சந்தித்து ஆலோசனை கேட்டார். சுவாமியும், "ப'ட்டினத்தார் நகரத்தாரைச் சேர்ந்தவராதலால் நகரத்தார்களே இந்தத்திருவிழாவை நடத்த வேண்டும். அதுவும் தாங்களே பொறுப்பேற்று நடத்த வேண்டும். காவிரிப்பூம்பட்டினத்திலேயே நடத்த வேண்டும்" என்று ஆசி வழங்கினார். பல்லவனீச்சுரர் கோயிலுக்கு அருகிலே இடம் வாங்கிக் கொட்டகை போட்டு "மகாதேவா" காசிச்செட்டியாரால் தொடங்கப்பட்டது தான் இந்த அற்புதத் திருவிழா. பட்டினத்தார் முக்தி அடைந்த ஆடிமாதம் உத்திராட நட்சத்திரத்தன்று குருபூஜையைக் கணக்காக வைத்து அதற்கு முன்பு ஒன்பது நாட்களும் பிறகு இரண்டு நாட்களும் ஆக 12 நாட்கள் என இந்தத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. நாளடைவில் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் இந்த விழாவில் கலந்து கொள்ளவே காசிச்செட்டியார் தானும் கொடுத்து ஏனைய நகரத்தார்களின் உதவியுடன் விடுதிக் கட்டிடம் கட்டி, கணக்கப்பிள்ளை முத்துக்குமார் பிள்ளை கதை சொல்ல, திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். இந்தக் கைங்கரியத்தில் பங்கு பெற்ற பல நகரத்தார் பெருமக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அமராவதிபுதூர் வைநாகரம் குடும்பத்தார் புதுவயல் வடு.மு.ராம.இராமனாதன் செட்டியார் குடும்பத்தார் ஆகியோர். விடுதியைக் கோனாபட்டு அ.நா.செ.சாலி ஆச்சியும் தாணிச்சாவூரணி செ.மு.சித.சிவகாமி ஆச்சியும் நன்கு கவனித்துக் கொண்டார்கள்.

காசிச் செட்டியாருக்குப்பின் அவருடைய மூத்த மகன் நாச்சியப்ப செட்டியாரும் அதன் பிறகு அவருடைய தம்பி அருணாச்சலம் செட்டியாரும் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள். கண்டனூர் எஸ்.வி.ஆர்.எம். இராமநாதன் செட்டியர் மிகவும் உதவியாக இருந்தார்கள். அவருக்குப் பின் அவருடைய மகன் ஆவுடையப்பனும் அவர்

சகோதர்களும் விழா நடைபெறுவதற்கு ஆண்டுதோறும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். மேலும் சி.ராம.சொ. சொக்கலிங்கம் செட்டியாரும் அவருக்குப்பின் அவரது மகன் சொ.பழனிமலைச் செட்டியாரும் இந்த விழா நடைபெறுவதற்கு உறுதுணையாக உள்ளனர். காரைக்குடி பி.எல்.டி.எல். அருணாச்சலம் அவர்கள் திருவிழா நடைபெற உதவியாக இருந்ததுடன் முத்துக்குமாரருக்குப் பிறகு நீண்ட நாட்கள் சிறப்பாகவும் தனித்தன்மையுடனும் கலகலப்பாகவும் கதை சொல்லி வந்தார்கள். தற்போது ஆத்தங்குடி முருகப்பன் என்பவர் கதை சொல்லி வருகிறார். திருவிழாவிற்கு வழக்கமான மண்டகப்படிதாரர்கள் இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலும் நகரத்தார்கள் பலர் நன்கொடை அளித்து வருகிறார்கள். திருவிழா நடைபெறும் அனைத்து நாட்களிலும் விடுதியில் தங்குவதற்கும் உணவிற்கும் வசதிகள் செய்யப்படுகிறது.

இங்குள்ள ஸ்ரீ சௌந்தரநாயகி உடனுறை ஸ்ரீ பல்லவனநாதர் பட்டினத்தார் கோயிலுக்குக் கடந்த நான்கு முறையும் நகரத்தார்களாலேயே திருப்பணி செய்யப்பட்டுக் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. சரி, இனிக் காட்சிப்படுத்தப்படும் வரலாறோடு இணைந்து பட்டினத்தாரோடு நாமும் பயணிப்போமா!

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு ஒருநாள் இறைவனும் இறைவியும் தோழராகிய குபேரனுடன் வான்வெளியில் இருந்து பூமியைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தனர். தில்லைக்கூத்தன் திருநடம் புரிந்த கோயில் எனக் கொண்டாடப்படும் சிதம்பரம் வந்தபோது குபேரன் தந்நிலை இழந்தான். அடுத்து, காவிரிப்பூம்பட்டினம், திருவெண்காடு ஆகிய இடங்களுக்கு வந்தபோது அவற்றின் எழிலுக்கும் வனப்பிற்கும் தன் மனதைப் பறிகொடுத்தான். நகரத்தார் வாழ்ந்து வந்த அந்தப் புண்ணிய பூமியில் தானும் சிறிது நாட்கள் வாழ ஆசைப்பட்டு, எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சி நின்றான் குபேரன். கண்ணுதல் கடவுளும் குபேரனிடம், "தோழ! இது பாவ புண்ணியங்கள் நிறைந்த உலகு. இங்கு நீ வாழ வேண்டுமென்றால் உன்னுடைய தெய்வப் பிறப்பைச் சிறிது காலம் துறந்து மானுடனாய்ப் பிறந்து அதனால் ஏற்படும் உன்னுடைய

கர்ம பலன்களை அனுபவிக்க வேண்டும். உனக்கு இதற்கு ஒப்புதல் உண்டா?" என வினவுகிறார். மானுட மயக்கத்தில் குபேரனும், "இறைவா! எனக்குப் பூரண சம்மதமே! ஆயினும் ஒரு வேண்டுகோள். எனது கர்ம வினையை நீக்க எனக்கு நீ மகனாக வந்து பிறக்க வேண்டும். மானுடப் பிறவி எடுத்த இந்தக் குபேரனை நீவிர் ஆட்கொள்ள வேண்டும்" என வேண்டி நின்றார். முக்காலம் உணர்ந்த முக்கண்ணனும் முறுவலுடன் அவன் வேண்டுகோளை ஏற்றார்.

குபேரனுடைய எண்ணம் எவ்வாறு ஈடேறிற்று? வாருங்கள். காவிரி கடலில் கலக்கும், செல்வம் கொழிக்கும், "சங்கு முகம்" என்றும் வழங்கப்படும் காவிரிப்பூம்பட்டினம் செல்வோம்.

(முதல் நாள் திருவிழா)

அன்றைய காவிரிப்பூம்பட்டினம் வாணிபம் கொழிக்கும் ஒரு வளமான துறைமுகப் பட்டினம். நம் முன்னோர்களாகிய நகரத்தார் அங்குதான் கடல் வாணிபத்தில் அன்று கொடிகட்டிப் பறந்தார்கள். பொன்னும், மணியும், மின்னும் வைரமும் "கொண்டு விற்று" வந்தார்கள். செல்வத்தில் கொழித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு செல்வந்தர் தான் சிவநேசச் செட்டியார். அவருடைய அன்பு அகலா மனைவி ஞானகலாம்பிகை ஆச்சி.

வள்ளுவரும் வாசுகியும் போல நல்லறமாக அவர்கள் ஈடுபட்ட இல்லறத்தின் பயனாக அவர்களுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அதற்குத் "தில்லையம்மை" என்று பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்கள். மகளும் வளர்ந்தாள். செட்டியாரும் ஆச்சியும் இல்லற தர்மத்தோடு இறைவனுக்கும் அடியார்களுக்கும் அன்றாடம் வழிபாடும் தர்மமும் செய்து வந்தனர். ஆனாலும் அவர்களுக்கு ஒருமனக்குறையும் இருந்து வந்தது. "ஆசைக்கு ஒரு பெண் இருந்தாலும் ஆள்வதற்கு ஒரு ஆண்பிள்ளை இல்லையே" என்பதே அந்தக்குறை. ஆண்டவன் அடியார்களைச் சோதிப்பான்; ஆனால் கைவிடுவதில்லை.

இந்தச் சமயத்தில் தான் குபேரனுக்கும் மண்ணுலக ஆசை வந்தது. குபேரனே, சிவநேசச் செட்டியாரின் குலம் தழைக்க, மகனாக வந்து பிறந்தான். குபேரனே வந்துதித்த

குலமல்லவா! அதனால் தான் நாம் மன்னர் பின்னோராகவும் முடிசூட்டும் தகுதிபடைத்தவர்களாகவும் இருந்தோம். குபேரனுக்கு "வைசியன்" என்று ஒரு பெயரும் உண்டு. அதனால்தான் நாம் தன வைசியர்களோ?

திருவெண்காட்டு இறைவனை நாளும் வணங்கும் தன் பண்பால், குழந்தைக்குத் திருவெண்காடன் என்று பெயரிட்டு, சீரும் சிறப்புமாக வளர்த்துவந்தார் செட்டியார். காலத்தின் கோலம், திருவெண்காடரின் ஆறாம் வயதிலேயே சிவநேசச் செட்டியார் சிவபதவி அடைந்துவிட்டார். ஆனால் அதற்குள் மகனுக்குப்பல கலைகளையும் கல்வியையும் செட்டியார் செவ்வனே கற்பித்திருந்தார். திருவெண்காடர் கற்றவைகளை, இன்னும் பலகாலம் கற்று, கல்வி கேள்விகளிலும் வாணிபத்திலும் சிறந்து விளங்கினார்.

இம்மைப் பிறப்பில் செய்யும் செயல்களில் திருப்தி அடைந்த திருவெண்காடர் ஆன்மிகத்திலும் நாட்டம் கொண்டார். நகரத்தார் வழக்கப்படி உபதேசம் பெற விரும்பினார். தாயார் ஞானகலாம்பிகை ஆச்சி, மகனின் விருப்பத்தை அறிந்து, ஒருவேளை மகன் இல்லறத்தைத் துறந்து துறவியாகி விடுவானோ? அப்படி அவன் சென்றுவிட்டால் தன் நிலை என்னாகுமோ? என்று கவலைப்பட்டு மனநோய்வாய்ப்பட்டார். இவை பற்றிக் கவலை கொள்ளாத திருவெண்காடர் தனக்கு வழிகாட்டி உபதேசம் செய்யச் சரியான குருநாதர் எப்போது வருவாரோ? என்ற கவலையில் ஆழ்ந்து உடல் மெலியலானார்.

ஏற்றபொழுதில் வந்து அருள்மழை பொழிவதில் இறைவனுக்கு ஈடு இணை ஏது? ஒரு நாள் திருவெண்காடரின் கனவில் தோன்றிய ஈசன், "அன்பனே கவலை கொள்ளற்க! நாளை திருவோண நட்சத்திரம் கூடிய சோமவாரப் பிரதோஷ தினம். நீ நாளையே திருவெண்காட்டிற்குச் செல்! அங்கு உன்னைத் தேடி ஒரு துறவி வருவார். அவரே உன்னுடைய ஞானாசிரியன். அவரிடம் முறைப்படி உபதேசம் பெற்றுச் சிவபூஜை புரிந்து வருவாயாக!" என்று கூறி மறைந்தார். விழித்தெழுந்த திருவெண்காடர் ஆடினார், பாடினார், ஆனந்தக் கூத்தாடினார். தன்னுடைய எண்ணம் ஈடேறப்போகிறது என்னும் செய்தியைத் தாயிடம் கூறி

"நாளையே புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்" என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

(இரண்டாம் நாள் திருவிழா)

தாய் ஞானகலாம்பிகை ஆச்சி, தன் ஆசை மகன் திருவெண்காடருடன் திருவெண்காடு எய்தி, "அம்மை அப்பனை" வணங்கி அபிஷேக ஆராதனைகள் செய்து ஞானாசிரியனின் வருகையை எதிர்நோக்கி இருவரும் காத்திருந்தனர். எதிரில் வந்து நின்ற துறவியைக் கண்ணுற்ற திருவெண்காடரின் இமைகள் இமைக்க மறந்தன. ஏன் எனில் எதிரே நின்றவர் அவர் கனவில் கண்ட அதே துறவிதான். இவருடைய ஆவலை அதிகரிக்குமுகத்தான் துறவி பேசத் தொடங்கினார். "அன்பனே! நம்மூர் வியாக்கிரபுரம். நேற்றிரவு இங்கு வந்தோம். எமது கனவில் ஒரு மறையவர் தோன்றி என்னைத் "திருவெண்காடுக்கு வரவும் அங்கு வரும் சிறுவனாகிய உனக்கு உபதேசம் செய்யவும்" பணித்தார். அத்துடன் இந்தச் சம்புடத்தையும் கொடுத்து உன்னிடம் சேர்க்கும் படி கூறினார். இதனுள்ளே ஒரு சிவலிங்கமும், விநாயக மூர்த்தியும் இருக்கிறதாம். இது நீ முற்பிறவியில் பூசித்ததாம். யாராலும் திறக்கமுடியாத இச்சம்புடம் உன்கைபட்டதும் தானாகத்திறந்து கொள்ளுமாம். இதை உன்னிடம் சேர்ப்பித்து உன்னுடன் ஒரு மண்டலம் தங்கியிருந்து என்னை உபதேசம் செய்யும் படியும் கூறினார்" என்றார்.

இதைச் செவியுற்ற திருவெண்காடர் "ஐயனே! நான் பிறந்த பயனைப் பெற்றேன். என்னைத் தங்களுடைய சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறித் துறவியின் காலடியில் பலமுறை விழுந்து வணங்கி உபதேசம் கேட்க ஆயத்தமானார். அவருடைய கை பட்டதும் சம்புடம் தானாகத் திறந்து கொண்டது. உள்ளிருந்து ஒளிவீசிய விநாயகப் பெருமானையும், சிவலிங்கத்தையும், எடுத்து வைத்து முறைப்படி பூஜை செய்து ஒரு மண்டலத்திற்கு உபதேசம் கேட்டார் திருவெண்காடர். குருமூர்த்தியாக வந்த இறைவனும் வந்தவேலை முடிந்தது என்று சீடனை வாழ்த்தி விடைபெற்றார்.

(மூன்றாம் நாள் திருவிழா)

திருவெண்காட்டில் இருந்துகொண்டே தினமும் முக்குள நீராடி இறைவனை வழிபட்டு வந்த பிள்ளைப்பெருமான் சிவபூஜையும் மகேஸ்வரபூஜையும் தவறாது செய்து வந்தார். தான தர்மங்களும் செய்தார். வருமானம் ஏதுமின்றி இந்தப்பூஜைகளுக்காக நாளுக்கு நாள் அதிகம் அதிகமாகச் செலவு செய்யச்செய்ய தம்முடைய கைப்பொருள், முன்னோர் ஈட்டிய பொருள், அனைத்தும் செலவாகக் கண்ட பெருமான் செய்வதறியாது திகைத்தார். தாயும் மகனும் இறைப்பணி தடைப்பட்டுவிடுமோ என்று அஞ்சினர். அடியவரின் வருத்தம் தெளிவிக்க அவாவுற்ற இறைவன் அன்று தாய், மகன் இருவர் க்னவிலும் தோன்றி, "அஞ்சற்க! உங்களுடைய ஆன்மிகப்பணியும் அடியார் தொண்டும் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற யாம் சித்தம் கொண்டோம். தன்மாளிகையில் பொன்னும் பொருளும் அள்ள அள்ளக் குறையாமல் நிறையச் செய்துள்ளோம். தொடர்ந்து இறைபணியில் ஈடுபடுக" என்று நல்வாக்குக் கூறி அருளினார். மாளிகைக்குத் திரும்பிய தாயும் மகனும் திரும்பிய திசையெல்லாம் வீட்டில் செல்வம் நிறைந்திருக்கக் கண்டு மனமிக மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறித் தொடர்ந்து தமது தானதர்மங்களையும் இறைப்பணியையும் செய்து வரலாயினர்.

இறைப்பணியுடன் வாணிபமும் செய்து பொருளீட்டிய திருவெண்காடருக்கு அவரது 16ஆவது வயதில் திருமணம் செய்து வைக்க விரும்பிய தாயார், உள்ளூரிலேயே உயர் குடிப்பிறந்த, கல்வி, செல்வம், ஒழுக்கத்தில் சிறந்த சிவசிதம்பரம் செட்டியார் - சிவகாமி ஆச்சியின் மகளான குணவதியான, செல்வி சிவகலையை திருவெண்காடருக்கு ஊர்மெச்சத் திருமணம் செய்து வைத்தார். நகரத்தார் மரபுப்படி கழுத்தூரு கட்டி மாலை மாற்றி மாண்புற நடைபெறுகிறது திருப்பூட்டுதல். "காதல் இருவர் கருத்தொருமித்த ஆதரவு பட்டதே இன்பம்" என்றார் போல் இருவரும் கருத்தொருமித்து இல்லறமாம் நல்லறத்தை இனிமைசேர நடத்திவந்தனர். "மனைவி என்பவள் தாய்க்குத் துணைசெய்பவளே" என்ற அன்றையக் கருத்துக்கு ஏற்ப, சிவகலையும் மாமியாருக்கு ஏற்ற நற்றுணையானாள்.

(நான்காவது நாள் திருவிழா)

இல்லறம் என்னவோ நல்லறமாகத்தான் நடந்தது. ஆனாலும் திருவெண்காடருக்கு 35 வயதாகியும் தங்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்லையே என்ற வருத்தம் மிகுதியாகவே இருந்தது, கணவன் மனைவி இருவருக்கும். அதைவிட வாரிசு வளரவில்லையே என்ற கவலை தாயாருக்கு மிகுதியும் இருந்தது. கோயில் கோயிலாக ஏறி இறங்கியும் ஒரு குழந்தை இல்லையே என்று வருந்திய ஞானகலாம்பிகை ஆச்சி மகனையும் மருமகளையும் மீண்டும் ஒரு முறை திருவிடைமருதூர் சென்று வரப் பணித்தார். தாயாரின் ஆணைப்படி மகனும் மருமகளும் திருவிடைமருதூர் வந்து மகாலிங்க மூர்த்தியை மனமுருகி வழிபட்டனர். மனமிரங்கிய மகாலிங்கமூர்த்தி தானே அவர்களுக்கு மகனாகப் பிறக்க மனமுவந்தார். இதில் குபேரனுக்கு அளித்த வாக்குறுதியும் நிறைவேறுமல்லவா? திருவெண்காடராகிய குபேரனுக்கு மகாலிங்க மூர்த்தியாகிய சிவன் மகனாக அவதரிக்கப்போகிறார். இதுதான் அன்றே அவர் போட்ட கணக்கு.

திருவிடைமருதூரில் ஆதிசைவ அந்தணர் குலத்தில் சிவசருமர் - சுசீலை என்ற தம்பதியர் வசித்து வந்தனர். அக்கால வழக்கப்படி தம்மை அண்டி வருபவர்களுக்கு அன்னமளிக்கவும் சிவபூசை செய்யவும் வழியின்றி வறுமையில் வாடினார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத்திருவுளம் கொண்டார் மகாலிங்க மூர்த்தி. சிவசருமர் கனவில் தோன்றி "இங்குள்ள தீர்த்தக்கரையில் ஒரு வில்வமரம் இருக்கிறது. அதனடியில் ஒரு குழந்தை வடிவில் யாம் இருப்போம். நீவிர் எம்மை எடுத்துக் கொண்டு காவிரிப்பூம்பட்டினம் செல்லுங்கள். அங்கு பிள்ளைபாக்கியமின்றி தவிக்கும் திருவெண்காடர் என்பவரைச் சந்தியுங்கள். அவரிடம் எம்மைக் கொடுத்து எடைக்கு எடை பொன் பெற்று, உங்கள் வாழ்க்கையையும், அறப்பணியையும், இனிதாக்கிக் கொள்ளுங்கள்" என்றார். அதேபோல் திருவெண்காடர் சிவகலை கனவிலும் தோன்றி "அன்ப! மன அமைதி பெறுக! இப்பிறவியில் உங்களுக்கு இனிக் குழந்தை பாக்கியமில்லை. ஆனால் அதற்காக மனந்தளர வேண்டாம். உங்களுடைய அறப்பணிகளையும்

நற்குணத்தையும் கண்டு யாமே உமக்கு மகனாக வர முடிவு செய்துள்ளோம். ஊரின் ஓரத்திலே இருக்கும் சோலைக்குச் செல்லுங்கள். அங்கே சிவசருமர் - சுசீலை எனும் ஆதிசைவ அந்தணர் குலதம்பதியர் ஒரு அழகிய குழந்தையோடு காத்திருப்பர். அந்தக் குழந்தையே யாம். குழந்தையை எடைக்கு எடை பொன் கொடுத்துப் பெற்றுக் கொள்க" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

மறுநாள் விடிந்தும் விடியாத வைகறைப் போதில் திருவெண்காடரும் சிவகலையும் சோலைக்குச் சென்றனர். அங்கே சிவசருமரையும் சுசீலையையும் அந்த அற்புதக் குழந்தையுடன் கண்டனர். தங்கள் கலிதீர்ந்ததென, களிகூர்ந்து தெய்வக் குழந்தையின் எடைக்கு எடை பொன் கொடுத்துத் தத்தெடுத்துக் கொண்டனர். ஆச்சி கைக்கு குழந்தை வந்ததும் இறையருளால் பால் சுரக்கப்பெற்றுக் குழந்தைக்குக் கொடுத்தனர். குழந்தைக்கு மருதவாணர் எனப் பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வரலாயினர். ஆக அந்தக் காலத்திலேயே தத்தெடுக்கும் முறை வழக்கில் இருந்திருக்கிறது. ஆனால் இப்போதைப் போலக் குலம், கோத்திரம், பிரிவு எல்லாம் பார்த்து இல்லை என்பது புலனாகிறது.

(ஐந்தாம் நாள் திருவிழா)

மருதவாணர் சீரும் சிறப்புமாக, செல்லப்பிள்ளையாக வளர்ந்தார். அவர் வளர்ந்ததைப் போலவே அவருடைய அனுபவமும் திறமையும் சேர்ந்து வளர்ந்தன. சிறுவயது மருதவாணனின் செயல்கள் அளவிற்கரியன. ஒருநாள் தன்னொத்த சிறுவர்களுடன் கடல் நீராடச் சென்றார். படகில் பயணித்து நெடுந்தூரம் சென்று விட்டனர். திடீரென, பெரிய மீன் ஒன்று படகை விழுங்குவது போல் வந்து படகில் மோதியது. படகும் அதில் இருந்த சிறுவர்களும் நடுங்கிப் போயினர். ஆனால் மருதவாணர் அச்சமின்றி அந்தமீனைத் தன்காலால் உதைத்துக் கொன்றார். உயிரற்ற மீனில் இருந்து உயிருடன் ஒரு கந்தர்வன் தோன்றினான். "என் பெயர் மணிக்கிரீவன். ஒரு முனிவரின் சாபத்தால் நான் மீனாக வாழ்ந்தேன். தங்கள் கால் பட்டு என் சாபம் நீங்கியது" என்று கூறி மருதவாணரை வணங்கி விடை பெற்றான்.

உடன் வந்த சிறுவர்களால் இந்தத் தகவல் ஊருக்குள் தெரிய, மருதவாணரை மக்கள் மரியாதையுடன் பார்க்கத் தொடங்கினர்.

இப்படிப்பல நற்செயல்களால் நாளும் பேருடனும் புகழுடனும் வளர்ந்து வந்த மருதவாணர் பதினாறுவயது எய்தினார். அதற்குள் வணிகத்தின் நெளிவு சுளிவுகளைக் கற்றுத் தேர்ந்தார். இன்று வட்டிக்கடைகளிலும் வங்கிகளிலும் பொன்னுக்கு மாற்றுப் பார்க்கத் தெரிந்தவர்கள் இருப்பதைப்போல அந்தக்காலத்தில் இரத்தினப்பரீட்சை முத்துப்பரீட்சை எனக் கற்களைத்தரம் பார்த்து வாங்கவும் விற்கவும் தனித்திறமை பெற்றிருக்க வேண்டும். அந்தப் பரீட்சைகளில் எல்லாம் முன்நின்ற மருதவாணர் நகரத்தார்களுக்கே உரிய "திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்" எண்ணம் கொண்டார். தந்தையிடம் அனுமதி வேண்டி நின்றார். ஆனால் பாசத்தின் வயப்பட்ட திருவெண்காடரோ, "மகனே! நம்மிடம் இருக்கும் செல்வமே ஏழுதலைமுறைக்குப் போதுமே! நீ வேறு திரைகடல் ஓடி திரவியம் தேட வேண்டுமா? வேண்டாமே" என்றார். தனயனின் பிடிவாதமே வென்றது. கோமகன் கொண்டு விற்கச்சென்றார். மிகவும் திறமையாக வாணிபம் செய்து மிகக்குறைந்த நாட்களில் நிறைந்த பொருளைத் தேடினார். பொன்னும் மணியும் இரத்தினமும் முத்தும் எனப் பொருள் நிறைந்தது.

கொண்டு விற்று முடிந்து ஊர் திரும்ப வேண்டிய நேரம் வந்தது. மருதவாணர் அவல், கடலை, பொறி என மூட்டை மூட்டையாகச் சேகரித்தார். வரட்டிகளாக வாங்கி வாங்கி அவற்றையும் மூட்டைகளாக்கினார். ஆனால் பொறிகடலைக்குள் சிறுசிறு துண்டுகளாகப் பொன்னை வெட்டிக்கலந்தார். விராட்டிகளில் இரத்தினங்களையும் முத்துக்களையும் பதித்தார். இது அவருடன் வந்தவர்களுக்குத் தெரியாது. கப்பல் புறப்பட்டது. நடுக்கடலில் மழையிலும் புயலிலும் சிக்கிய கப்பல் திசைமாறிச் சென்றது. நாட்கள் பல நகர்ந்தன. மழையின் வேகம் குறையவில்லை. கரையையும் காணவில்லை. கப்பலில் இருந்த அனைவரும் பசியாலும் குளிராலும் வாடிச் செய்வதியாது திகைத்தனர். அப்போது மருதவாணர் அவல் பொறிகடலையை உண்பதற்கும்

வரட்டியை எரித்துக் குளிர்காய்வதற்கும் அனைவருக்கும் கொடுத்து உதவினார். கூடவே நண்பர்களிடம் குளிர்காயப் பயன்படுத்திய வரட்டிகளுக்குப் பதிலாக இம்மாதிரி வரட்டிகள் தர வேண்டும் என்று எழுதி வாங்கிக் கொண்டார். ஒரு வழியாக அனைவரும் கரைசேர்ந்தார்கள். தத்தம் இல்லம் திரும்பிக் கொண்டிருந்த அவர்கள் வழியில் திருவெண்காடரைக் கண்டார்கள். புயலில் சிக்கிய தன் மகன் என்ன ஆனானோ எனப் பதைபதைப்புடன் மகனைத்தேடி வந்து கொண்டிருந்த திருவெண்காடரிடம் அவர்கள் பரிகாசத்துடன் சொன்னார்கள். "என்ன ஐயா! உங்கள் பிள்ளைக்குச் சித்தம் கலங்கிப்போயிற்றோ? கொண்டு சென்ற முதல் அத்தனையையும் அழித்துப்பாழாக்கிவிட்டு அவல் பொறிகடலையும் வரட்டியும் மூட்டை மூட்டையாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். நல்ல பிள்ளையைப் பெற்றீர்கள். பாவம் நீங்கள். ஆனாலும் அவர் கொண்டு வந்த பொறிகடலை எங்கள் பசிக்கும், வரட்டி குளிர்காயவும் உதவிற்று. நாங்களும் அவருக்கு அதுபோல் வரட்டியை இங்கு தருவதாக எழுதிக்கொடுத்திருக்கிறோம். போங்கள் போய் உங்கள் பித்துப்பிடித்த பிள்ளையைப் பாருங்கள்" என்று கூறி அவரவர் வீடு சென்றார்கள்.

திருவெண்காடருக்கு மகனைக் காணாத துயரம் ஒருபுறம். "பித்துப்பிடித்தவன்" என்று சொல்கிறார்களே என்று ஒருபுறம். துயரம் பொங்கக் கடற்கரைக்குத் தேடிச் சென்றார். ஆனால் வேறொரு பாதையில் இல்லம் ஏகிய மருதவாணர் தாம் கொண்டு வந்த வரட்டி மற்றும் பொறி மூட்டைகளைத் தாயார்முன் இறக்கிவைத்துவிட்டு ஒரு சிறு கைப்பெட்டியையும் கொடுத்தார். திரும்பிப் பார்க்காமல் போய்விட்டார். கடற்கரைக்கு மகனைத் தேடிச்சென்ற திருவெண்காடர் அவனது பித்துக்குளித்தனத்தைப் பற்றிப்பலரும் கேலி செய்து பேசியதால் மிகுந்த கோபத்துடன் வீடு திரும்பினார். சிவகலை ஆச்சியும் மகன் கொண்டுவந்து கொடுத்த கைப்பெட்டியை அவரிடம் கொடுத்து அவல், பொறி, விராட்டி மூட்டைகளையும் காண்பித்தாள். மகனுடைய மதியீனத்தை எண்ணிக் கோபம் கொண்ட திருவெண்காடர் வரட்டி மூட்டைகளை காலால் உதைத்துச் சிதறவிட்டார். பொறி மூட்டையை

அவிழ்த்து வீசினார். ஆங்கு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. வரட்டிக்குள்ளிருந்து விலை உயர்ந்த இரத்தினமும், முத்தும், மணியும் சிதறின. பொறி மூட்டையில் இருந்து பொன் துகள்களும் சிறுசிறு பொற்கட்டிகளும் சிதறின. அதைப் பார்த்த மருதவாணருக்குச் சிறிது நேரத்திற்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு தான் தெரிந்தது தன் மகனின் சாமர்த்தியம், வியாபாரத்திறமை. இதைக்கண்டு மனமிகமகிழ்ந்து மகனைத் தேடுகிறார். கப்பலில் சென்று விரட்டி பெற்றுப் பட்டயம் எழுதிக் கொடுத்த தோழர்கள், விரட்டியில் இருந்த முத்தையும் இரத்தினத்தையும் பார்த்துத் தாமும் இவ்வாறான விராட்டியை அல்லவா திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று செய்வதறியாது தடுமாறினாலும் மருதவாணரின் மதிநுட்பத்தைக் கண்டு வியந்து நின்றனர். பிறகு நினைவு வரப்பெற்று தன்மகன் கொடுத்ததாகச் சொல்லிச் சிவகலை கொடுத்த பெட்டியைத் திறக்கிறார் திருவெண்காடர். முறுக்கு அவிழ்ந்துபோன ஒருநூல், காது உடைந்துபோன ஒரு ஊசி. ஒரு சிறிய நறுக்கோலை அதில் ஒரு குறிப்பு எழுதப்பட்டிருந்தது. "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே". அப்போதுதான் மகனாக வந்த மகாலிங்கமூர்த்தியின் கருணையை உணர்ந்தார் திருவெண்காடர். கன்னத்தில் ஓங்கி அறைந்தது போல ஓர் உணர்வு. ஒன்றுக்கும் உதவாத, முறுக்கவிழ்ந்த நூலும், நூலையே கோர்க்க முடியாத இந்த காதற்ற ஊசியும் கூட, நாம் போகும் போது வரப்போவதில்லை என்றால் நமக்கு மாடு, மனை, சுற்றம், செல்வம் இதெல்லாம் எதற்கு என்று எண்ணினார். திருவெண்காடர் ஒரு நொடியில் மன்னர் போன்ற வாழ்வைத் துறந்தார். மாடு, மனை, மனைவி அனைத்தையும் துறந்தார். கணக்கப்பிள்ளை சேந்தனாரை அழைத்தார். தன்னுடைய செல்வம் அனைத்தையும் பெயர் சொல்லி யாருக்கும் கொடுக்கச் சொல்லவில்லை. சூறையிடச் சொன்னார். அப்படிச் சூறையிட்டால் யார் வேண்டுமானாலும் அதை எடுத்துக் கொள்ளலாம். அல்லவா? பட்டாடையையும் பகட்டான வாழ்வையும் துறந்தார். காவியாடை அணிந்தார். கொடிகட்டி வாழ்ந்த ஊரிலேயே அந்தந்த வேளைக்கு உணவை இரந்து உண்டு இறை வழியைத் தேடிப் புறப்பட்டார். இவ்வுலக வாழ்வின் நிலையாமையை இதைவிட யாரால் உணர்த்த

முடியும். உரிமை கோர ஆள் இல்லாத சொத்து அரசுக்குச் சொந்தம் என்பது அந்தக் காலத்து நடைமுறை. ஆகவே அரசின் சட்டம் சொத்தைச் சூறையிட்ட சேந்தனாரின் மீது பாய்ந்தது. சேந்தனார் சிறைப்பட்டார்.

திருவெண்காடர் துறவு பூணும் முன் தன்மனைவி சிவகலையிடம், தான் துறவு பூணப்போவதைச் சொல்ல அவர் தானும் துறவறம் மேற்கொள்ள விழைந்தார். ஆனால் திருவெண்காடர், "அது பெண்ணுக்குப் பொருந்தாது. நீ இல்லறத்தில் இருந்து கொண்டே இறைப்பணியாற்றி வீடுபேறு அடைவாயாக" என்று கூறினார்.

ஆத்தாள் ஞானகலாம்பிகையிடம் சென்றார். துறவு பூண இருக்கும் செய்தியைச் சொல்ல. மகன் ஒருநாள் இப்படித்தான் ஆவான் என்று எதிர்பார்த்திருந்த ஆத்தாள் கேட்டாள். "எல்லாவற்றையும் துறந்துவிட்டேன் என்கிறாய். எனக்கு நம்பிக்கையில்லை. இடையில் உனக்குத்துவராடை எதற்கு? அதைத் துறக்க முடியவில்லையா" என்றார். கன்னத்தில் விழுந்த இரண்டாவது அறை இது. இரண்டாவது ஞானம். காவித்துண்டைக் களைந்து கோவணம் அணிந்தார்.

பின், முதற்பிச்சை ஆத்தாள் கையில் பெறலாமே என்று அவாவுற்று மீண்டும் அவரிடம் வந்து திருவோடு ஏந்திப் பிச்சை கேட்டார். ஆத்தாள் சொன்னாள். "முற்றும் துறந்தவனுக்கு திருவோடு எதற்கு? அதுவும் ஒரு சொத்துத்தானே" என்றாள். இது மூன்றாவது ஞானம் - மீண்டும் கன்னத்தில் அறை. திருவோட்டைத் தெருவோடு எறிந்தார். இருகைகளையே ஏந்திப் பிச்சை எடுக்கத் தீர்மானித்தார். பிறகு தாயிடம் "ஆத்தா! போய் வரட்டுமா" என்றார். "மகனே துறவி எங்காவது போய் வருவானா" என்று கேட்க, திகைத்துப்போன திருவெண்காடர் அப்படி என்றால் "நான் போகட்டுமா" என்றார். ஆத்தாள் சொன்னாள்: "அதுவும் தவறுதான் மகனே! துறவியானாலும் தாய்க்குச் செய்ய வேண்டிய அந்திமக்கடன் இருக்கிறதே? அதற்கு நீ எங்கிருந்தாலும் வரத்தானே வேண்டும். அதை நீ நிறைவேற்றாத வரையில் நீ என்னை விட்டுப் போய்விட முடியாது" என்றார். அவர் கன்னத்தில் மீண்டும் ஓர் அறை நான்காவது ஞானம்.

பக்குவப்பட்ட திருவெண்காடர், "ஆத்தா! என்னைப் பெற்ற வயிற்றுக்கடன் தீர்க்க நான் எங்கிருந்தாலும் வருவேன்" என்கிறார். "வருவாய். ஆயின் நான் போய்ச் சேர்ந்த செய்தியை நீ அறிவது எப்படி? அதற்கோர் வழி சொல்கிறேன் கேள். இதோ இந்த முடிச்சை உன் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொள். எப்பொழுது இந்த முடிச்சு அவிழ்கிறதோ அப்போதே என் இறுதி என்று அறிந்துகொள். எங்கிருந்தாலும் எனக்கு எரியூட்ட வந்து சேர்" என்று இடுப்பில் அந்த முடிச்சைக் கட்டி மகனை வழியனுப்பி வைத்தார் அந்த மாதவத்தாய்.

(ஆறாம் நாள் விழா)

காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து துறவு பூண்டமையால் திருவெண்காடர் "பட்டினத்தார்" என்று அழைக்கப்பட்டார். "உடுக்கக் கோவணம் - படுக்கத்திண்ணை - உண்ண ஊரில் பிச்சை" எனப் பிறந்த ஊரிலேயே வலம்வந்தார் பட்டினத்தார். அது அவரது உற்றார் உறவினருக்குப் பெரும் தலைக்குனிவையும் பரிதாபத்தையும் ஏற்படுத்தியது. பட்டினத்தார் திருவிழாவை மக்களுக்குக் காட்சிபடுத்துவதற்கு மட்டுமே காவி உடையுடனும் திருவோட்டுடனும் அலங்கரிக்கப்பட்டுள்ளார். அந்த ஊரிலேயே வாழ்ந்து வந்த அவருடைய தமக்கைக்கும் தலைக்குனிவை ஏற்படுத்தியது. "இப்படிப்பட்ட ஒரு தம்பி இருப்பதை விட இறப்பதே மேல்" என்று முடிவுக்கு வந்தார். மாலை மயங்கும் நேரத்தில் பிச்சை எடுத்துக் கொண்டு வந்த பட்டினத்தார் தமக்கை வீட்டு வாயிலுக்கும் வந்தார். அவரைக் கண்டு ஆத்திரப்பட்ட தமக்கை தில்லையம்மை என்ற சிவகாமி ஆச்சியும் "இப்படிப்பட்ட ஒரு தமையன் இருப்பதை விட இறந்து படுவதே மேல்" என்று எண்ணி நஞ்சு கலந்த ஓர் அப்பத்தை அவருக்குப் பிச்சையாக இட்டாள். அவர் கையில் அப்பம் பட்டதும் அது எப்படிப்பட்டது என்பதைக் கையும் உள்ளமும் உணர்ந்தன. முற்றும் துறந்த ஞானியல்லவா? அவருக்குத் தெரியாதா? தெரியும். ஆனால் கோபம் வரவில்லை. மாறாக, "தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று அப்பத்தை தமக்கை வீட்டு ஓட்டின்மேல் வீசி எறிந்தார். வீடும் பற்றி எரிந்தது.

இதுதான் பட்டினத்தாரை "ஞானி" என்று உலகுக்கு அறிவித்த முதல் சித்து. இந்த அற்புதத் திருவிழாவில் இன்று தான் 76 ஊர் நகரத்தார் ஆச்சிமார்களும் கலந்து கொள்ளும் திருவிளக்கு பூஜை கோலாகலமாக நடைபெறுகிறது.

(ஏழாம் நாள் திருவிழா)

இன்று மேலப்பள்ளம் என்று வழங்கும் திருவலம்பூரின் குறுநில மன்னன் ஒருவனுக்கு ப்ரம்மஹத்திதோஷம் பிடித்திருந்தது. அது நீங்க அவன் தினமும் ஆயிரம் பேருக்கு அன்னதானம் அளித்து வந்தான். "என்றைக்கு இந்த அன்னதானத்தில் ஒரு ஞானி கலந்து கொள்கிறாரோ அன்று கோயிலில் கட்டியுள்ள "நாக்கில்லாமணி" ஒலிக்கும்; மன்னரின் தோஷம் விலகும் என்று சோதிடர்கள் கூறினார். பட்டினத்தார் அந்த அன்னதானத்துக்கு வந்து காவலர்களால் விரட்டப்பட்டுப் பசியின் கொடுமையால் தூப்பாவில் வடிந்த அரிசிகளைந்த கழு நீரைக் குடிக்க நாக்கில்லாமணி ஒலித்தது. அரசனும் ப்ரம்மஹத்திதோஷம் நீங்கப்பெற்று இவரை அடையாளம் கண்டு பட்டினத்தாரைப் போற்றி வணங்குகிறான். இது பட்டினத்தார் நிகழ்த்திய இரண்டாவது அற்புதம்.

தாயின் இறுதி நாளை எண்ணிப் பட்டினத்தாரும் காவிரிப்பூம்பட்டினத்தின் அருகிலேயே சுற்றிக்கொண்டு இருந்தார். அன்று தாயார் ஞானகலாம்பிகையின் மூச்சு மெல்ல மெல்ல அடங்கியது. அப்போது பட்டினத்தார் திருவெண்காட்டில் இருந்தார். இடுப்பில் கட்டிய முடிச்சு அவிழ்ந்து விழ, பட்டினத்தார் பதறினார். உற்றார் உறவினரும் பங்காளிகளும் முறைப்படி கேதம் கேட்பதும் ஆச்சிமார்களின் ஒப்பாரியும் இங்குக் காட்சிப்படுத்தப்படுகின்றன. தகவல் தெரிந்து அவர் வருவதற்குள் உற்றாரும் சுற்றமும் பல்லக்குக்கட்டி ஆச்சியின் உடலை ஏற்றி இடுகாட்டுக்குக் கொண்டு சென்றனர். அப்போதும் பட்டினத்தார் வராத காரணத்தால் சிதையில் கட்டைகள், விறகுகள், விராட்டி என அடுக்கி எரியூட்ட ஏற்பாடுகள் செய்தனர். அப்போது பதறி அடித்துக் கொண்டு பட்டினத்தார் ஓடோடி வந்தார். தாயின் உயிரற்ற உடலைக் கண்டு உள்ளம் மிக வருந்தினார். துறவியானாலும் தாய்ப்பாசம் போகுமா?

"முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து தொந்தி சரியப்பெற்ற தாய், தொட்டிலிலும் கட்டிலிலும் தோள்மேலும் மார்மேலும் வைத்துச் சீராட்டி வளர்த்த தாய், தான் வருந்திப்பெற்றெடுத்த தன் மகனின் உடல் நோகாமல் இரவு பகல் பாராமல் இருகரங்களிலும் ஏந்தி வளர்த்த தாய், அவள் உடல் நோகும் வண்ணம் இந்தக் கரடுமுரடான விறகுக்கட்டையிலும் விராட்டியிலுமா வைத்து எரியூட்டுவேன். மாட்டேன். அன்னை இறந்து விட்டாலும் அவள் உடல் நோகக் கூடாது" என்று எண்ணிய பட்டினத்தார் அடுக்கிய விறகு மற்றும் விராட்டிகளை எடுத்து விட்டு மென்மையான பச்சை வாழைமட்டையை அடுக்கினார். விறகானாலும் பச்சை வாழைமட்டையானாலும் எரியப்போவது நெருப்புத்தானே. பிறகு ஏன் வாழைமட்டை என எண்ணத்தோன்றும். அது பட்டினத்தாருக்குத் தெரியாதா? தாயின் மீது கொண்ட அளவற்ற பாசத்தால் அன்பு அறிவை மறைத்தது எனலாம்; அல்லது அவர் ஞானாக்கினியால் எரித்ததால் உடலில் நெருப்பின் கொடுமை படராதும் இருந்திருக்கலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனை உளத்திலே சிந்தித்து "ஐயிரண்டு திங்கள்" என்று தொடங்கும் பத்து இரங்கற் பாடல்களைப் பாடினார்.

"பின்னர், முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே"

என்று பாடியதும், தீமூண்டு கொழுந்து விட்டு எரிந்து பிடி சாம்பலாகியது. இது பட்டினத்தார் நிகழ்த்திய மூன்றாவது அற்புதம். முறைப்படி தன்தாயின் ஈமச்சடங்குகளை முடித்த பட்டினத்தார் மகாலிங்க மூர்த்தியைப் போற்றிப் பாடிக் கொண்டே திருவிடைமருதூர் சேர்ந்தார். மருதூர் இறைவனின் கருணையால் தாயாருக்கும் மோட்சம் கிடைத்தது.

(எட்டாம் நாள் திருவிழா)

திருவிடை மருதூர் வரும் வழியில் களைப்பு மிகுதியால் பட்டினத்தார் ஒரு வயல் வரப்பில் தலைவைத்துக் கண்ணயர்ந்தார். அவ்வழியே சென்ற இருகிராமத்துப் பெண்கள் "பாருடி! ஆண்டிக்கு எதுக்குடி இந்த சொகம். தலையை வரப்பிலே வைச்சுப் படுத்திருக்காரு பாரு!" என்று பேசிச் சிரித்துக் கொண்டே சொன்னார்கள். இந்தப் பேச்சு காதில் விழுந்த பட்டினத்தார், அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதே? எனக்கு ஏன் தலையணைக்குப் பதில் வரப்பு! என்று எண்ணித்தலையைத் தரையில் வைத்துப்படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அதே பெண்கள் திரும்பி வந்தனர். இவர் தரையில் தலைவைத்துப்படுத்திருப்பதைப் பார்த்ததும், "பாரடி! இவரு இன்னும் முழுசா சாமியார் ஆகலடி" என்றாள் ஒருத்தி. "ஏன் அப்படி சொல்கிறாய்" என்று கேட்டாள் இன்னொருத்தி. "அடுத்தவங்க என்ன பேசுறாங்கன்னு காது கொடுத்துக் கேட்கிறவரை ஒருத்தர் முழுசா சாமியார் ஆகமுடியாதுடி" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். மீண்டும் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை. பட்டினத்தார் ஐந்தாவது முறையாக ஞானம் பெற்ற நிகழ்வு இது.

திருவிடைமருதூரில் கோவில் வாசலில் பிச்சை எடுத்து உண்டு மருதூராரை வணங்கிவந்த பட்டினத்தாரைப் பல தலங்களுக்கும் சென்று இறைவனைத் தொழுது வருமாறு கனவில் தோன்றிப் பணித்தார் மருதூரார். அவரும் பல தலங்களுக்குச் சென்று இறைவனைப் பணிந்து திருவாரூர் வந்து சேர்ந்தார். அங்கு அவர் தங்கியிருந்த நாட்களில் ஓர் இளைஞன் அவரிடம் பேரன்பு பாராட்டிப் பணிவிடை செய்து வந்தான். இல்லற வாழ்வை இயல்பாகவே விரும்பாத அவனுக்கு அவன் பெற்றோரின் வேண்டுதலின் பேரில் பட்டினத்தார் திருமணம் செய்து கொள்ள அவனைச் சம்மதிக்க வைத்துத் திருமணமும் செய்துவைத்தார். நாட்கள் சில சென்றன. இல்லற வாழ்வில் ஒரு நாள் அவன் சுரசன்னிகண்டு இறந்தான். பெற்றோரும் மனைவியும் உற்றாரும் மனம்மயங்கி நின்றனர். "தன் அன்புக்குரியவன் இப்படி ஆகிவிட்டானே" என்று மனம் வருந்திய பட்டினத்தார் தியாகேச பெருமானை வேண்டி

அவன் உயிர் பிழைக்கப் பாடல்கள் சிலவற்றைப் பாடினார். தியாகேசனின் திருவருளால் மாண்டவன் மீண்டான். இது பட்டினத்தார் நடத்திய நான்காவது அற்புதம். திருவாரூரில் இருந்து பாண்டிய நாட்டில் மதுரை; கொங்குநாட்டில் அவிநாசி, பேரையூர், சேர நாட்டில் திருவாஞ்சைக்களம்; ஆகிய ஊர்களில் சில நாட்கள் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு பசியின் மிகுதியால் ஒரு வீட்டின் கதவைத்தட்டி உணவு வேண்டும் என்று பட்டினத்தார் கேட்க, அவ்வீட்டில் இருந்த ஒரு முரடன் அடிகளாரைப் பற்றி அறியாது அவரைத் தடி கொண்டு அடித்துவிரட்டி விட்டான். ஆயின் அக்கம்பக்கத்திலிருந்த, அடிகளாரின் அருமை பெருமை அறிந்தவர்கள் இவருக்கு அன்னமிட்டு உபசரித்தனர்.

உணவு உண்டாலும் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை எண்ணி மனம்மிக வருந்திய பட்டினத்தார், நான் இருக்குமிடம் தேடி எனக்கு உணவு வந்தாலன்றி உணவைத் தேடி இனி நான் செல்லேன் என்று ஒரு விரதம் மேற்கொண்டார். அப்போது பாடியது தான் இந்தப்பாடல்:

இருக்குமிடம் தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் - பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி

பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஆந்திராவில் பத்ராசலம் நகருக்கு அருகில் உள்ள உஞ்சேனைமாகாளம் என்ற ஊருக்கு வந்தார். அங்குள்ள விநாயகர் கோயிலில் யோக நிஷ்டையில் அமர்ந்தார். அன்று இரவில் திருடர்கள் அரண்மனையில் திருட்டை நிகழ்த்தித் திரும்பி வந்தனர். அக்கால வழக்கப்படி, திருடர்களின் தலைவன் ஒரு முத்துமாலையை எடுத்து நன்றிக்கடனாக வினாயகர் இருக்கும்பக்கம் வீசிவிட்டுச் சென்றான். இருளில் அவன் விநாயகராக நினைத்தது நிஷ்டையில் இருந்த பட்டினத்தாரை. மாலை விழுந்தது பட்டினத்தாரின் கழுத்தில். விடிந்தது. திருடர்களைத் தேடி வந்த அரசனின் காவலர்கள் முத்துமாலையுடன் காணப்பட்ட பட்டினத்தாரைத் திருடன் என்று பிடித்துச் சென்று அரசனிடம் ஒப்படைத்தனர். அரசரும் ஆராய்ந்து பாராமல் அவரைக் கழுவிலேற்றும் படி தண்டனையளித்தார். கழுமர

மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பட்டினத்தார் தன் விதியை எண்ணி நொந்து கொண்டு,

"என் செயலாவது யாது ஒன்றுமில்லை இனித் தெய்வமே உன் செயலே என்று உணரப் பெற்றேன் இந்த ஊனெடுத்து பின் செய்த தீவினையா தொன்றுமில்லை பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவோ" என்று பாடினார். உடனே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இது இவர் நிகழ்த்திய ஐந்தாவது அற்புத விளையாட்டு.

இதைக்கேள்வியுற்ற மன்னன் தவறுணர்ந்து ஓடோடி வந்து இவரிடம் மன்னிப்புக் கேட்டான். பட்டினத்தாரும் அம்மன்னனை மன்னித்தருளினார். அம்மன்னரே பத்திரகிரியார். அவருக்கு ஞானோபதேசம் செய்து சீடராக ஏற்றுக் கொண்டார். அரச வாழ்க்கையைத் துறந்து பத்திரகிரியாரைத் திருவிடைமருதூருக்குச் செல்லுமாறு பட்டினத்தார் பணிக்க அவ்வாறே அரசரும் ஆண்டியாகி மருதூருக்குப் பயணமானார்.

பட்டினத்தாரும் விந்தகிரி, காசி, கேதாரம், குற்றாலம், இராமேஸ்வரம், திருமறைக்காடு ஆகிய தலங்களுக்குச் சென்றுவிட்டுத் திருவிடைமருதூர் திரும்பினார்.

(ஒன்பதாம் நாள் விழா)

திருவிடை மருதூரில் மேலக் கோபுர வாசலில் பட்டினத்தாரும் கீழக்கோபுர வாசலில் பத்திரகிரியாரும் தங்கிப் பிச்சை எடுத்துக்கொண்டு இறை வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். தன் முன்பிறப்பில் தாசியாக இருந்து ஒரு துறவிக்கு உணவு அளித்த புண்ணியத்தால் நாயாகப் பிறந்து இப்பிறப்பில் பத்திரகிரியாருடனேயே இருந்து வந்தது ஒரு நாய். பத்திரகிரியாரும் பிச்சை எடுத்த உணவை முதலில் பட்டினத்தாருக்குக் கொடுத்து, பிறகு அந்த நாய் அடியாருக்கும் இட்டுத் தானும் உண்டு வந்தார். நாட்கள் பல நகர்ந்தன. ஒரு நாள் பட்டினத்தாரைச் சோதித்துப் பார்க்க விரும்பிய மருதவாணராகிய மகாலிங்க மூர்த்தியும் அவரிடம் சென்று பிச்சை கேட்டார். பட்டினத்தாரும் அப்பா! என்னிடம் ஒன்றுமில்லை; திருவோட்டையே துறந்தவன் நான். உனக்குக் கொடுக்க என்னிடம் ஏதுமில்லை.

ஆனால் கீழக்கோபுரவாசலுக்குப்போ! அங்கு என்னுடைய சீடரான ஒரு குடும்பஸ்தன் இருக்கிறான். அவனிடம் சென்று யாசிப்பாயாக! என்று கூறி அனுப்பினார். மகாலிங்க மூர்த்தியும் அவ்வாறே பத்திரகிரியாரிடம் சென்று கூறினார். "ஆகா! நாம் திருவோடு வைத்திருப்பதாலும் நாய் ஒன்றைக் கூடவே வைத்து உணவிடுவதாலும் அல்லவா நம்மைக் குடும்பஸ்தன் என்று கூறிவிட்டார்" என்று கூறித் திருவோட்டை நாயின்மேல் வீசி எறிந்தார். ஓடு தலையில் பட்டதால் அந்த அடியாராகிய நாயும் மாண்டது. பத்திரகிரியாரும் தெளிவு பெற்றார். "ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்" போன்ற புகழ் பெற்ற "பத்திரகிரியாரின் புலம்பல்" என்ற பாடல்களைப் பாடினார்.

ஓட்டில் அடிபட்டுமாண்ட நாய் மறுபிறவியில் காசிராஜனின் புதல்வியாகப் பிறப்பெடுத்துத் தனக்குத் திருமணம் வேண்டாம். தன் ஞான குருவான பத்திரகிரியாருடன் தான் செல்ல வேண்டும் எனக் கூற, காசிராஜனும் அவளைத் திருவிடை மருதூருக்கு அழைத்து வந்தான். ஆனந்தவல்லியே நாயடியாள் என்பதை உணர்ந்த பத்திரகிரியார் அவளை அழைத்துக்கொண்டு பட்டினத்தாரிடம் சென்று விபரம் கூறினார். அப்போது தான் பட்டித்தார்முன் அந்த அற்புதம் நிகழ்ந்தது. பத்திரகிரியாரையும் நாயடியாளையும் ஆண்டவன் ஆட்கொண்டு சோதியில் கலக்கச் செய்தான்.

இந்த அற்புதத்தைக் கண்ணுற்ற பட்டினத்தார், "அருட்கடலே! இன்னும் நான் எவ்வளவு காலம் இந்த மண்ணுலகில் உழலவேண்டும். உன் திருவடி சேரும் நாள் எந்நாளோ" என்று மனமுருகி வேண்டினார். "திருவெண்காடா! ஒற்றியூர் வருக! என்ற அசரீரி வாக்கு ஒலித்தது. இறைவனும் அவர் முன் தோன்றிக் கையில் ஒரு கரும்பைக் கொடுத்து "இந்தக் கரும்பு எங்கு, என்றைக்கு, இனிக்கிறதோ, அங்கு, அன்று நீ நம்மை வந்தடைவாய். அதுவரை தலங்கள் தோறும் சென்று எம்மைத்தரிசித்து வா" என்று கூறிமறைந்தார். அன்று முதல் அடிகளாரும் கையில் கரும்புடன் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டே, அவ்வப்போது நுனிக்கரும்பையும் சுவைத்துப் பார்த்துக் கொண்டே வந்தார்.

(பத்தாம் நாள் திருவிழா)

பட்டினத்தார் முதலில், திருவெண்காடு வந்தார். இவர் வந்திருக்கும் செய்தியறிந்து, சிறைப்பட்டிருக்கும் சேந்தனாரின் மனைவியும் மகனும் வந்து, அவரைச் சிறை மீட்டுத் தருமாறு வேண்டினர். அவர்களது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பட்டினத்தாரும் சிவனை நினைத்துப் பாடினார். அடியாரின் துயர் துடைக்கும் சிவனும் தன் மூத்தபிள்ளை வினாயகரை அனுப்பிச் சேந்தனாரைச் சிறை மீட்கும்படி ஆணையிட்டார். வினாயகரும் விலங்கொடித்துச் சேந்தனாரை மீட்டார். விலங்கு முறித்த வினாயகர் ஆலயத்தை இன்றும் அங்குக் காணலாம். "சிதம்பரம் சென்று வணிகம் செய்து சிவனடியார்களுக்கு நாளும் உணவளித்து தொண்டு செய்து இறைவனடி சேர்வாயாக" என்று சேந்தனாரையும் அவர்தம் குடும்பத்தினரையும் வாழ்த்தி, வழி அனுப்பி வைத்தார் பட்டினத்தார்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு, சீர்காழி, சிதம்பரம், திருவதிகை வீரட்டானம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருவாலங்காடு, திருப்பாசூர், திருக்காளத்தி ஆகிய தலங்களுக்குச் சென்று ஆங்காங்கே பல பாடல்களைப்பாடி இறைவன் கருணையைப் பெற்றுக் கொண்டு திருவொற்றியூர் வந்து சேர்கிறார். ஒற்றியூர் மண்ணில் கால்பட்டதும் அவருக்கு எல்லை இல்லாத ஒரு புத்துணர்வு பிறக்கிறது. கரும்பைச் சுவைத்துப் பார்க்கிறார்; அது இனிக்கிறது. "ஆகா! நாம் வந்து சேர வேண்டிய இடத்திற்கு அவனருளாலே வந்து சேர்ந்துவிட்டோம்" என்று களிகூர்ந்து இறைவனின் சன்னதி சேர்ந்து நன்றி கூறுகிறார்.

"இரு நில மடந்தை இயல்பினில் உடுத்து" என்று தொடங்கும் திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது என்னும் பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகத்தைப் பாடுகிறார். திருவொற்றியூரில் அவருக்கு அடியார்களின் பாதம்பட்ட மண்ணெல்லாம் நோய் தீர்க்கும் மருந்தாகவும் தெருவில் உள்ள மணல் எல்லாம் திருநீறாகவும் காட்சியளிக்கிறது. அதையொட்டி "வாவி எல்லாம் தீர்த்தம், மணல் எல்லாம் வெண்ணீறு" என்று ஒரு பாடலைப் பாடுகிறார்.

பட்டினத்தாருக்குப் புரிகிறது தாம் இறையருள் பெறப்போகும் நேரம் நெருங்கிவிட்டது என்று; தம்முடைய

ஆறாவதும் நிறைவானதுமான அற்புத விளையாட்டைத் தொடங்க ஒற்றியூர் கடற்கரைக்குச் செல்கிறார். அங்கு விளையாடும் சிறுவர்களை அருகே அழைக்கிறார். அவர்களுடன் விளையாடி அவரும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்விக்கிறார். அந்தச் சிறுவர்களைக் கடற்கரை மணலைத் தோண்டி ஆழமான ஒரு குழியைத் தோண்டச் சொல்லுவார். தான் அதில்போய் உட்காருவார்; மண்ணைப்போட்டு மூடச்சொல்லுவார். பிறகு வேறொரு இடத்திலிருந்து வெளியே வருவார். இப்படிப் பலமுறை செய்யச் சொன்னார். அவர்களும் ஆனந்தம் கொண்டு அதிசயத்துடன் இந்த விளையாட்டைத் தொடர்ந்தார்கள். நிறைவாக ஒருமுறை பட்டினத்தாரை ஒரு குழியில் இறக்கி மண்ணைப் போட்டு மூடுகிறார்கள். காலம் கடந்து செல்கிறது. உடனுக்குடன் வேறு இடத்திலிருந்து வெளியே வந்து விடும் பட்டினத்தார், இந்த முறை நீண்ட நேரம் ஆகியும் வெளியே வரவில்லை பயந்துபோனார்கள் சிறுவர்கள். கடற்கரை மணலில் நாலாபுறமும் ஓடிஓடிப் பார்க்கிறார்கள். எங்கும் காணவில்லை சரி. அவர் இறங்கிய குழியையே தோண்டிப்பார்ப்போம் என்று தோண்டுகிறார்கள். பார்த்தால் அங்கே அவர் இல்லை. ஆனால் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. சிறுவர்களுக்குப் பயத்தில் ஒன்றும் புரியவில்லை. ஊருக்குள் போய் பெரியவர்களிடம் நடந்ததைக் கூறி அவர்களை அழைத்து வருகிறார்கள். சிவலிங்கத்தைக் கண்ணுற்ற ஊர்மக்கள் மெய்சிலிர்த்தனர். பக்திப்பரவசத்தோடு வழிபட்டனர். அன்று - அவர் மோட்சம் அடைந்த நாள் ஆடிமாதம் உத்திராட நட்சத்திர நாள். அந்நாளில் தான் அவருடைய குருபூஜை கொண்டாடப்படுகிறது. இதை, "ஆடியுத்திராட மருட்சிவத்திற் பட்டினத்தார் நாடியறக் கலந்த நாள்"என்று திரு.வி.க. குறிப்பிடுவார். கடந்த 15ஆண்டுகளாக, கோவிலூர் ஆதீனம் பட்டினத்தார் குருபூஜை தினத்தன்று எழுந்தருளி இதில் கலந்து கொள்கிறார்கள். அன்றைய தினத்தில் மகேஸ்வர பூஜையும் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. திருவொற்றியூரில் கடற்கரையில் அவர் சிவலிங்கமாக அமர்ந்த இடத்தில் கோயில் கட்டப்பட்டு அது தற்போது புதிப்பிக்கப்பட்டும் இருக்கிறது. பட்டினத்தார் மனைவியாகிய சிவகலை அம்மையார் அடிகளுக்கு முன்பாகவே இறைவனடி சேர்ந்து விடுகிறார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும் இந்தத் திருவிழாவில் 11ஆம் நாள் பஞ்சமூர்த்திகளும் திருவெண்காடரும் இடப வாகனத்தில் காட்சி தந்து தீர்த்தம் கொடுக்கிறார்கள். அன்று நகரத்தார் அனைவருக்கும் பரிவட்டம் கட்டி மரியாதை செய்கிறார்கள்.

12ஆம் நாள் காலை பஞ்சமூர்த்திகளுக்கும் மருதவாணருக்கும் சிவகலை உடனாய பட்டினத்தடிகளுக்கும் சுசீலை உடனாய சிவசருமருக்கும், பத்திரகிரியார், நாயடியாள் ஞானகலாம்பிகை, சேந்தனார். அவர் மனைவி, மகன் ஆகியோருக்கும் ருத்ராபிஷேகமும், விடையாற்றியும் நடைபெறுகிறது.

பட்டினத்தார் நகரத்தார்களுக்கு மட்டுமல்ல மனித குலம் அனைத்திற்கும் ஞானக்கண்களைத் திறந்தவர். புத்தரைப்போல் ஆசையையும் துறக்கவேண்டும் என வழிகாட்டியவர். இத்தகைய சிறப்பு மிக்க பட்டினத்தாருக்கு விழா எடுப்பவர்கள் நகரத்தார்கள். வெள்ளி வாகனங்கள் தங்க நகைகள் செய்து வைத்து விடுதி கட்டி விழா நடத்தவும் கோயில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தவும் உதவியவர்கள் நகரத்தார் பெருமக்களே. நகரத்தாரின் பொது விழாவான பட்டினத்தார் விழா நகரத்தார்களுக்குப் பெருமை சேர்க்கும் விழாவாகவும் அவர்தம் பண்பாட்டை அறியும் விழாவாகவும் அமைந்துள்ளது. பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் 12நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற இந்தப் பட்டினத்தாரின் அற்புதத் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் பட்டிமன்றம் கவியரங்கம் பரதநாட்டியம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் எனச் சிறப்பாக நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டினத்தார் வாழ்க்கையும் வாக்கும் மனித குலத்திற்கோர் வழிகாட்டி. நகரத்தார்களுக்கு பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்காமல் இறைப்பணியும் அடியவர் பணியும் செய்யத் தூண்டும் ஓர் வரலாறு. கன்னத்தில் அறைவதைப் போல் நிலையாமையை எடுத்துக் கூறிய இவர் வழி நின்று இறைவனடியைச் சிந்திப்போமாக!

வாழ்க பட்டினத்தார்! வளமும் நலமும் பெறுக நகரத்தார்!

பட்டினத்தார் பாடல்கள்

பட்டினத்தார் பாடல்களை, நாம் பல நிலைகளில், சந்தர்ப்பங்களில், படித்தும், கேட்டும், மனித வாழ்வின் நிலையாமையைப் பற்றிப் பலவாறாகச் சிந்தித்திருக்கிறோம். நிலையாமையையும், இறைவனுடைய அருமையையும் பற்றி கற்பனைக்கு எட்டாத அளவிற்கு, ஆழமாக, தீர்க்கமாக, அறுதியிட்டுச் சொன்னவர் அவர். பட்டினத்தார் பாடல்களை நாம் ஆழ்ந்து படிக்கும்போது அவற்றின் அமைப்பில், சொற்கட்டில், கருத்தாழத்தில் சிற்சில வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

பட்டினத்தார் பற்றி ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள், தீந்தமிழ்ப் புலமையும், தீவிர பக்தியும், ஆழ்ந்த ஞானமும் கொண்ட மூன்று வெவ்வேறு பட்டினத்தார் இருந்திருக்கலாம் என்று துணிகிறார்கள்.

பட்டினத்தார் பாடல்கள் பன்னிருதிருமுறைகளில், பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அவை,

1. கோவில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக்கோவை
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5. திருஒற்றியூர் ஒருபா ஒருபஃது

இவை தவிர, இன்னும் சில பிரபந்தங்களும் தனிப்பாடல்களும், "பட்டினத்தார் பாடல்திரட்டு" என்ற பெயரில், பற்பலரால் உரை எழுதப்பட்டு உலா வருகின்றன.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையின் இறுதிப் பாடலில், பட்டினத்தார் தன் பெயரை "வெண்காடன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று பட்டினத்தார்களில், 11ஆம் திருமுறைப் பாடல்களை அளித்தவர் ஒருவர். அவரது காலம் 10ஆம் நூற்றாண்டு - பாடல்கள் 200.

14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பட்டினத்தார் இடைக்காலத்தவர்.. இவர் அருளிய பாடல்கள் 203.

மூன்றாமவர் பிற்காலப் பட்டினத்தார் என்று கருதப் படுகிறார். இவர் எழுதிய பாடல்கள் 246. இப்பாடல்கள், 19ஆம் நூற்றாண்டில் திரட்டு நூலாக, "பதினெண் சித்தர் ஞானக்கோவை" என்ற பெயரில் வெளியானது.

வாழ்வின் நிலையாமையை ஆழ்ந்து உணர்த்திய இந்தத் துறவிக்கு அனைத்தையும் மிஞ்சி நின்றது தாய்ப்பாசம். அது பாசம் கூட அல்ல; கடமை. ஒவ்வொரு மகனும், தன் தாய், தந்தையருக்குச் செய்ய வேண்டிய, இறுதியான, உறுதியான கடமை அது.

தாய்ப்பாசம் என்பது, காலம் கடந்து, நாடு கடந்தது. உலகில் உள்ள அனைவருக்கும் பொதுவானது. கடமையானது. உலகின் தலைசிறந்த ஆன்றோர்கள் அனைவரும் தாயின் சிறப்பை, தாய்ப்பாசத்தின் மகிமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

"எல்லா இடங்களிலும் தானே இருக்க முடியாது என்பதற்காகத்தான், இறைவன் தாயைப் படைத்தான்" என்கிறது விவிலியம்.

"தாயின் காலடியில்தான் சொர்க்கம் இருக்கிறது" என்கிறார் நபிகள் நாயகம்.

"பசுவின் மடியைப்போல் அன்பைச் சுரக்கிறது தாயின் உருவம்" என்கிறார் விவேகானந்தர்.

கொடுங்கோலனாகச் சித்திரிக்கப்பட்ட ஹிட்லர் கூட, தாயின் படத்தை அணைத்தபடிதான் தற்கொலை செய்து கொண்டாராம்.

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்பது நாம் ஆரம்பப் பள்ளியில் பயின்ற பாடம்.

“ஐயிரண்டு திங்களாய்” என்று தொடங்கி, பட்டினத்தார் பாடிய அந்த 10 பாடல்கள், இந்த உலகம் உள்ள அளவும் தாய்ப்பாசத்தைப் பறை சாற்றி நிற்கும். பட்டினத்தார் பாடல்களிலேயே தலைசிறந்தவை இந்தப் பாடல்கள்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்(து) எடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்(து) என்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்(து) எடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய் தலைமேல்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியே னையகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

உடற்கூற்று வண்ணம் என்ற தலைப்பில், வாழ்வியலை விளக்கும் பாங்கு இது.

ஒருமட மாது மொருவனு மாகி
யின்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்க வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்து - 1

பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய்வாய் செவி கால்கைகள் என்ற - 2

உருவமு மாகி உயிர் வளர் மாதம்
ஒன்பது மொன்றி நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து - 3

மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்பட வுந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுத மருந்தி
ஓரறிவு ஈரறிவாகி வளர்ந்து - 4

ஒளிநகை யூறல் இதழ்மட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப - 5

உடைமணி யாடை அரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே - 6

உயர்தரு ஞான குரு உபதேசமும்
தமிழின் கலையும் கரை கண்டு,
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து - 7

மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து,
மணிபொ னிலங்கு பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க - 8

மதன சொரூபன் இவன்என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு,
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு - 9

மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி - 10

ஒருமுத லாகி முதுபொரு ளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து,
மதன சுகந்த விதனமிது என்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து - 11

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரை திரை வந்து

வாத விரோத குரோதம் அடைந்து
செங்கை யினிலோர் தடியு மாகியே - 12

வருவது போவது ஒருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து,
மதியும் அழிந்து, செவி திமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து - 13

துயில் வரு நேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சம் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு - 14

கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சலம் மிஞ்ச,

கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து – 15

தெளிவு மிராகல் உரை தடுமாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு,
தடமும் உலைந்து மிகவும் மலைந்து
தேறி நல்லாதர வேதென நொந்து – 16

மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
ஏதினி வாழ்வு நில்லாது இனி நின்ற – 17

கடன்முறை பேசும் எனஉரை நாவு
உறங்கி விழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே – 18

வளர்பிறை போல எயிறும் உரோமமும்
சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச,
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போய் யம தூதர்கள் வந்து- 19

வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்து அழ நொந்து,
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் கால மறிந்து – 20

பழையவர் காணும் எனும் அய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்தவே
பிணம் வேக விசாரியும் என்று – 21

பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம் கழுவும் சிலரென்று,
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை – 22

வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வு எ(ன்)ன வாழ்வென நொந்து- 23

விறகிட மூடி அழல் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறு மிலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே. 24

வாழ்வெனும் கடல் பற்றிய திருவிருத்தம்

நாப்பிளக்கப் பொய் உரைத்து நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றுஈசல் போலப்
பொலபொலவெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர் பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கு தனைப்போல
அகப்பட்டீர் கிடந்து உழல அகப்பட் டீரே.

இன்னும் பல தலைப்புகளில் பட்டினத்தார் பாடிய பாடல்களில் சில கோயிற்றிருவகவல்

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்;
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்;
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்;
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்;
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்;
அருந்தின மலமாம், புனைந்தன அழுக்காம்;
உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்;
என்றிவை அனைத்தும் உணர்ந்தனை; அன்றியும்;

திருவேகம்பமாலை

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தான், அவனின் சதகோடி யுள்ளத்துறவுடையோன்;
மறந்தா னறக்காற் றறிவோடிருந்திரு வாதனையற்று
இறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சியேகம்பனே!

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார்; மயானங் குறுகியப்பால்
எட்டி யடிவைப்ப ரோ? யிறைவா! கச்சி யேகம்பனே.

கைப்பிடி நாயகன் தூங்கையிலே யவன்கையெடுத்து
அப்புறந்தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவில்

ஒப்புடன்சென்று துயில்நீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படிநான் நம்புவேன்? இறைவா! கச்சி யேகம்பனே !

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை, பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை; இடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி யேகம்பனே !

அன்ன விசார மதுவே விசாரம் அதுவொழிந்தால்
சொன்ன விசாரந் தொலையா விசாரம் நல்தோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சக்கு
என்னவிசாரம் வைத்தாய் இறைவா, கச்சி யேகம்பனே!

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையும், நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந், துதியாப் பிழையுந், தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே.

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென் றெண்ணாமற் ககமென்று நாடுமித் துர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப்பேன்? இறைவா, கச்சி யேகம்பனே.

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளுறு சொல்லினுங் காணத்தகுங் கச்சி யேகம்பனே.

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டை யாடிநயம் புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்தபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங் குளமும் கல்லாவு மென்ன
ஈயாமனிதரை யேன் படைத்தாய்? கச்சி யேகம்பனே.

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
யேற்றித் திரிந்துவிட் டேனிறைவா, கச்சியேகம்பனே.

திருவேகம்பவிருத்தம்

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ?
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ?

முன்னை எத்தனை எத்தனை சன்மமோ?
மூடனாயடி யேனும றிந்திலேன்,
இன்ன மெத்தனை யெத்தனை சன்மமோ?
என்செய் வேன்? கச்சியேகம்ப நாதனே?

திருத்தில்லை

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே.

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றோ டொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்ற வினை
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.

அடியார்க் கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம், வையம் ஏழளந்த
நெடியோனும் வேதனுங்காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்களவர்காணு மெங்கள் குலதெய்வமே.

உடுப்பானும் பாலன்னமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக்
கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென்றேற்பானும் ஏற்கக் கொடாமனின்று
தடுப்பானு நீயல்லையோ? தில்லையானந்தத் தாண்டவனே.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும், பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவா திருமனமே, யதுகாணநல் மருந்துனக்கே.

திருவிடைமருதூர்

காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன? உள்ளன்பி லாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பனு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

தாயும்பகை; கொண்ட பெண்டீர் பெரும்பகை; தன்னுடைய
சேயும்பகை; யுறவோரும் பகை; இச்செகமும் பகை;
ஆயும் பொழுதி லருஞ்செல்வம் நீங்கில்! இக்காதலினாற்
தோயுநெஞ்சே, மருதீசர் பொறபாதஞ் சுதந்திரமே.

திருக்காளத்தி

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி,
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண்கயிலாபுரிக் காளத்தியே!

வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லலன்; மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேன் அல்லன்; தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே?

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று
பல்லுங் கரையற்று வெள்வாயுமாய், ஒன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென்றோ? கயிலா யத்தானே.

மதுரை

விடப்படுமோ இப்பிரபஞ்ச வாழ்க்கையை? விட்டுமனம்
திடப்படுமோ? நின்னருளின்றியே தினமே அலையக்
கடப்படுமோ? அற்பர்வாயிலிற் சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோ? சொக்க நாதா, சவுந்தர பாண்டியனே.

பொது

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்து மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன, தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே.

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்கு செல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ யொருவரு மிங்கில்லையே.

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானிடமே.

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

மனையாளு மக்களும் வாழ்வும் தனமுந்தன் வாயின் மட்டே
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவம்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே.

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

என்செயலாவதி யாதொன்று மில்லை யினித் தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே.

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே - ஆசைதனைப்
பட்டிறந்த காலமெலாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

முதற்சங் கமுதூட்டு மொய் குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங் - கடைச்சங்கம்
ஆம்போ ததுவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம் பூமி வாழ்ந்த நலம்.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன் னாதே - பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

திருக்காஞ்சி

எத்தனையூ ரெத்தனை வீடெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன் - நித்தம்
எனக்குக் களையாற்றா யேகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ.

திருவிருப்பையூர்

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே - நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

திருவொற்றியூர்

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றியூர்.

விருத்தம்

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்குதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட் டீரே.

நெஞ்சொடு புலம்பல்

மண்காட்டிப் பொன்காட்டி மாயவிருள் காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடி நாய்போ லலைந்தனையே நெஞ்சமே.

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனை யாளிருக்கப்
பீடிருக்க வூணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.

ஓட்டைத் துருத்தியை யுடையும் புழுக்கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ரருளை மிகப் போற்றியே
வீட்டைத் திறந்து வெளியையொளி யாலழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே.

"பூரண மாலை" - சில கண்ணிகள்

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதிமறந்தேன் பூரணமே

உந்திக் கமலத் துதித்து நின்ற பிர்மாவை
சந்தித்துக் காணாமற் றட்டழிந்தேன் பூரணமே

நாபிக் கமல நடுநெடுமால் காணாமல்
ஆவிகெட்டு யானு மறிவிழந்தேன் பூரணமே

உருத்திரனை யிருதயத்தி லுண்மையுடன் பாராமல்
கருத்தழிந்த நானுங் கலங்கினேன் பூரணமே

விசுத்தி மயேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே

நெற்றி விழியுடைய நிர்மலச தாசிவத்தைப்
புத்தியுடன் பாராமற் பொறியிழந்தேன் பூரணமே

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே

உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுட னானு மறிவழிந்தேன் பூரணமே

மூக்கு முனையை விழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டு நானு மறிவழிந்தேன் பூரணமே

இடைபிங் கலையி னியல்பறிய மாட்டாமல்
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே

ஊனுக்கு ணீனின் றுலாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலமழிந்தேன் பூரணமே

மெய்வாழ்வை நம்பி விரும்பிமிக வாழாமல்
பொய் வாழ்வை நம்பி புலம்பினேன் பூரணமே

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்று நம்பி யுடலழிந்தேன் பூரணமே

தண்டிகைபல் லாக்குடனே சகலசம் பத்துக்களும்
உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் பூரணமே

இந்த வுடலுயிரை யெப்போதுந் தான் சதமாய்ப்
பந்தமுற்று நானும் பதமழிந்தேன் பூரணமே

மாதர் பிரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்து
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே

சரியைகிரி யாயோகந் தான்ஞானம் பாராமல்
பரிதிகண்ட மதியதுபோற் பயனிழந்தேன் பூரணமே

மண்பெண்பொன் னாசை மயக்கத்தி லேவிழுந்து
கண்கெட்ட மாடதுபோற் கலங்கினேன் பூரணமே

தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அனியாய மாய்ப்பிறந்திங் கலைந்து நின்றேன் பூரணமே

ஈராறு தன்கலைக்குள் ளிருந்துகூத் தாடினதை
ஆராய்ந்து பாராம லறிவழிந்தேன் பூரணமே

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே

கருவிகடொண் ணூற்றாறிற் கலந்துவிளை யாடினதை
இருவிழியாற் பாராம லீடழிந்தேன் பூரணமே

உடலுக்குள் நீநின்று லாவினதைக் காணாமல்
கடல்மலைதோ றுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே

எத்தேச காலமுநா மிறவா திருப்பமென்று
உற்றுனைத்தான் பாராம லுருவழிந்தேன் பூரணமே

எத்தனைதாய் தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனா யானும் பிறந்திறந்தேன் பூரணமே

பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் யானுமுன்றன்
பொற்றுணைத்தாள் தந்து புகலருள்வாய் பூரணமே

உற்றா ரழுதலுத்தா ருறவின் முறையார் சுட்டலுத்தார்
பெற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே

பிரமன் படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்
உரமுடைய வக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே

எண்பத்து நான்குநூ றாயிரஞ் செனன முஞ்செனித்துப்
புண்பட்டு நானும் புலம்பினேன் பூரணமே

கருவா யுருவாய்க் கலந்துல கெலாநீயாய்
அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே

என்னை யறியாம லெனக்குள்ளே நீயிருக்க
உன்னை யறியாம லுடலிழந்தேன் பூரணமே

எனக்குள்ளே நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலை தீர வரமருள்வாய் பூரணமே

அண்டபிண்ட மெல்லா மணுவுக் கணுவாய்நீ
கொண்ட வடிவின் குறிப்பறியேன் பூரணமே

தாயாகித் தந்தையாய்த் தமர்கிளைஞர் சுற்றமெல்லாம்
நீயாகி நின்ற நிலையறியேன் பூரணமே

மந்தரமாய்ச் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தை நானறியச் தகுமோதான் பூரணமே

பூரண மாலைதனைப் புத்தியுடனோதி னார்க்குத்
தாரணியில் ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே.

"நெஞ்சோடு மகிழ்தல்" - சில கண்ணிகள்

அன்றுமுத லின்றளவு மாக்கையொடு சூழ்ச்சியுமாய்
நின்ற நிலையறிய நேசமுற்றாய் நெஞ்சமே

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா யுருவிறந்து நின்றனையே நெஞ்சமே

பாராமற் பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓரா துணர்வுடனே யொன்றினையே நெஞ்சமே

களவிறந்து கொலையிறந்து காண்பனவுங் காட்சியும்போல்
அளவிறந்து நின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே.

பேச்சிறந்து சுட்டிறந்து பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்து நின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே.

விண்ணிறந்து மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்து நின்றதிலே யேகநித்தாய் நெஞ்சமே

பார்த்த விடமெங்கும் பரமெனவே யுட்புறம்புங்
கோத்தபடி யுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

ஊரிறந்து பேரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்து நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே

ஆண்பெண் ணாலியென் றழைக்கவா? தாய்நிறைந்து
காண்பவரி தாயவிடங் கண்ணுற்றாய் நெஞ்சமே

ஆங்கார மச்சமகற்றி யறிவி னொடு
தூங்காமற் றூங்கிச் சுகம்பெற்றாய் நெஞ்சமே

விருப்புவெறுப் பில்லாத வெட்ட வெளியதினில்
இருப்பே சுகமென் றிருந்தனையே நெஞ்சமே.

மேலாகி யெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறு மென்சுவைபோற் பற்றினையே நெஞ்சமே

கடங்கடங்க டோறுங் கதிரவ னூடாடி
அடங்குமிடந் தானறிந் தன்புற்றாய் நெஞ்சமே

கற்றவனாய்க் கேட்டவனாய்க் காணானாய்க் காண்பவனாய்
உற்றவனாய் நின்றதிலே யொன்றுபட்டாய் நெஞ்சமே

விட்டிடமும் தொட்டிடமும் விண்ணிட்டு மண்ணிடமுங்
கட்டுமொரு தன்மையெனக் கண்ணுற்றாய் நெஞ்சமே

எத்தேச முநிறைந்தே யெக்கால முஞ்சிறந்து
சித்தாய சித்தனிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

தாழாதே நீளாதே தன்மயம தாய்நிறைந்து
வாழாதே வாழ மருவினையே நெஞ்சமே

உள்ளும் புறம்பு முவட்டாத வானந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே

எந்தெந்த நாளு மிருந்தபடி யேயிருக்க
அந்தச் சுகாதீத மாக்கினையே நெஞ்சமே

வாக்கிறந்து நின்ற மனோகோ சரந்தனிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய் நெஞ்சமே

நாலு வகைக்கரண நல்குபுல னைந்துமொன்றாய்ச்
சீலமுற்று நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே

வாதனைபோய் நிட்டையும்போய் மாமௌன ராச்சியம்போய்ப்
பேதமற நின்றவிடம் பெற்றனையே நெஞ்சமே

இரதம் பிரிந்துகலந் தேகமாம் வாறேபால்
விரகந் தவிர்ந்தணல்பால் மேவினையே நெஞ்சமே

சோதியான் சூழ்பனிநீர் சூறைகொளு மாறேபோல்
நீதிகுரு வின்றிருத்தாள் நீபெற்றாய் நெஞ்சமே.

இப்படிப் பற்பல பாடல்களால், வாழ்வின் நிலையாமை யையும், இறைவனின் பெருமையையும், கருணையையும் பாடிய பட்டினத்தார்,

காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே என்ற உண்மையை உணர்ந்த அந்தக்கணமே, பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை அத்தனையையும் துறந்து, துவராடையுடன், பிறந்த ஊரிலேயே - பெருமகனாக வாழ்ந்த ஊரிலேயே - திருவோடு ஏந்தி, தெருவோரம் பிச்சை எடுக்கும் மனப்பாங்கு பெற்ற பட்டினத்தார் சொல்கிறார்.

வாளினால் நான் பெற்ற பிள்ளையை அறுத்து அடியவர்க்கு ஊட்டிய அந்த மனத்திண்மை, எனக்கு இல்லையே? மனைவி கூறிய சபதத்தால் இல்லற இன்பத்தை விட்டொழிக்கும் பக்குவம் எனக்கு இல்லையே? ஒருகண்ணை ஏற்கெனவே கொடுத்த நிலையில் மற்றொரு கண்ணையும் கொடுக்கும் திறன் எனக்கு இல்லையே இப்படி எந்தத் தகுதியும் இல்லாத நான் திருக்காளத்திநாதனுக்கு ஆளாவது எப்படியோ என்று உருகுகிறார் மருகுகிறார். யார்? அனைத்தையும் அரை நொடியில் தூக்கி எறிந்த பட்டினத்தார்! என்னே அவருடைய எளிமை! அதுவே அவருடைய வலிமை!!! அந்தப்பாடல்:

வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லன்; மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேன் அல்லன்; தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே?

வாழ்க பட்டினத்தார் புகழ்!
வளர்க அவர் காட்டிய வழி!!



க. ஜெயம்கொண்டான்

புதுக்கோட்டை மாவட்டம், மேலைச்சிவபுரியில் 1939ஆம் ஆண்டு பிறந்த இவர் தமிழ் இலக்கியத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றவர். 1962 முதல் 1997 வரை, சென்னை வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராக – வர்ணனையாளராகப் பணிப் புரிந்தவர். கதை, கட்டுரைகள், உரைச்சித்திரம், பாடல், நாடகம் என ஆயிரத்துக்கும் மேல் வானொலிக்காக எழுதி, பங்கேற்று, இயக்கி தயாரித்தளித்தவர். (எழுபதுகளில், தன் குரலாலும், கற்பனை வளத்தாலும், தமிழ்நாட்டு அனைத்துத் தரப்பு மக்களையும் தன் வயபடுத்தியவர். இளம் வயது முதலே நாடகம், திரைப்படங்களிலும், பிறகு தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்தவர்.) பத்துக்கும் மேற்பட்ட, சிறுவர்களுக்கான நூல்களை எழுதியுள்ள இவரது படைப்பான, "பொற்காசு" சிறுகதைத் தொகுப்பு – 1976இல் ஏவிஎம் அறக்கட்டளையின் தங்கப்பதக்கம் பெற்றிருக்கிறது. ஓய்வுபெற்ற பிறகு "ஒலி உலகம்" என்ற ஒலிப்பதிவுக் கூடத்தை, சென்னையில் நடத்தி வந்தார்.

எழுத்தாளர் – வருணனையாளர், நடிகர், இயக்குநர் என்ற பன்முகம் கொண்ட இவர், பொதிகைத் தொலைக்காடசியில் "எப்படிப் பாடினரோ!" என்ற ஆன்மிக இசைப்பயண நிகழ்ச்சியை 125 பகுதிகளாக எழுதி, குரல் கொடுத்து, இயக்கி, தயாரித்து அளித்துள்ளார்.

நகரத்தார் கலைக்கழகம், நண்பர் கலைக்குழு, வானொலி அறிவிப்பாளர் கூட்டமைப்பு (புதுதில்லி) போன்றவற்றிலும், மேலைச்சிவபுரி நகரத்தார் நற்பணி மன்றத்திலும், பல ஆண்டுகள் தலைமைப் பொறுப்புவகித்த இவர், கடந்த 30 ஆண்டுகளாக திருவான்மியூர் நகரத்தார் மன்றத்தின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.





கிடைக்கும் இடம்

கோவிலூர் மடாலயம்

போன் : 04565 236846, 238783